Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் பிலவ மாசி 24 ஆம் நாள் ரம்ழான் 29 (7-3-62) புதன்கிழமை இதழ் 25




# சேர் ஒலிவர் பதவி

# நீக்கமா? ராஜிநாமாவா?

## செனட் சபையில் திரு. சூசா கேள்வி

## "இரண்டும் இல்லை; பதவிக் காலம் முடிந்தது" —மந்திரி ஜயசூரியா

கொழும்பு, செவ்வாய்

"சேர் ஒலிவர் குணத்திலக்கா கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து நீக்கப்படவில்லை; அவா தமது பதவியை ராஜினாமாச் செய்யவுமில்லை. சேர். ஒலிவர் குணத்திலக்காவின் பதவிக்காலம் 1961ம் ஆண்டு ஜூன் அல்லது ஜூலைமாதத்துடன் முடிவடைந்துவிட்டது. அவரது இடத்துக்கு புதிதாக ஒருவர் இந்தமாதம் நியமிக்கப்பட்டார்" என்று செனட்சபை முதல்வரும் சுகாதார மந்திரியுமான செனட்டர் ஏ. பி. ஜயசூரியா இன்று செனட்சபையில் அறிவித்தார்.

"சேர் ஒலிவர் பதவி நீக்கம் செய்யப்பட்டாரா? பதவியை அவரே ராஜனாமாச் செய்தாரா? சதிசம்பந்தமாக அவர் விசாரணை செய்யப்பட்டாரா?" என்ற பல கேள்விகளை எதிர்க்கட்சித் தலைவர் செனட்டர் டொரிக் டி. சூசா இன்று சபையில் கேட்டபோது அதற்குப் பதிலளிக்கையிலேயே மந்திரி ஜயசூரியா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செனட் சபையின் இன்றைய கூட்டத்தில் ஒத்திவைப்புப் பிரேரணைமீது எதிர்க்கட்சித் தலைவர் செனட்டர் டொரிக் டி. சூசா பேசுகையில் பின்வருமாறு கூறினர்.

### பத்திரிகைகளில் அறிவித்தல்

மார்ச் மாதம் 2ந்திகதியுடன் புதிய கவர்னர் ஜெனரல் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாக பிரதமர் கைபொப்பமிடப்பட்ட அறிக்கையொன்று 1962ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ந்திகதி வெளிவந்த பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது.

### பதவி நீக்கமா? ராஜினமாவா?

புதிய கவர்னர் ஜெனரல் நியமனம் எப்படி எழுந்தது? சேர் ஒலிவர் பதவி நீக்கம் செய்யப்பட்டாரா அல்லது அவரே தமது பதவியை ராஜினமாச் செய்துகொண்டாரா? என்பன பற்றி அந்த அறிக்கையில் எதுவும் குறிப்பிடவில்லை. ஒரு பத்திரிகையில்

(8ம் பக்கம் பார்க்க)

## விஜயலட்சுமி பண்டிட் உப ஜனாதிபதியாவார்?

புதுடில்லி, மார்ச் 6

இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரபிரஜாத்தின் பதவிக்காலம் இம்மாதத்துடன் முடிவடைகிறது. ஜனாதிபதி பதவிக்கு ராஜன்பாபு மீண்டும் நிற்கமாட்டார்.

சிலமாதங்களுக்குமுன் நடைபெற்ற ராஜ்ய கவர்னர்களின் மகாநாட்டில் கலந்துகொண்ட ராஜன்பாபு தாம் 'கடைசியாகக் கலந்துகொள்ளும் உத்தியோகபூர்வமான மகாநாடு இது' என்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

புதிய ஜனாதிபதியாக டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் தெரிவுசெய்யப்படக்கூடுமென்று நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

உபஜனாதிபதி பதவிக்கு லண்டனில் இந்திய ஹைகமிஷனராகப் பணியாற்றியவரும் பிரதமர் நேருவின் சகோதரியுமான திருமதி விஜயலட்சுமி பண்டிட் தெரிவுசெய்யப்படலாமெனும் கூறப்படுகின்றது.

## ரஷ்ய எண்ணெ இம்மாதம் இலங்கை வருகிறது

கொழும்பு செவ்வாய்

ரஷ்யாவும இலங்கையும் செய்துகொண்ட எண்ணெ ஒப்பந்தத்தின்படி இலங்கை ரஷ்யாவிடமிருந்து இம்மாதம் 12-ம் திகதியன்று எண்ணெ பொருள்களின் முதலாவது இறக்குமதியைச் செய்யும்.

15 லட்சம் கலன் டீசில் எண்ணெயும் 12 லட்சம் கலன் மண்எண்ணெயும் இந்த இறக்குமதியிலிருக்கும்.

இவனோவா என்ற ரஷ்யக் கப்பலே இவற்றை இங்கு ஏற்றிவரும்.

20 லட்சம் தொன் டீசல் எண்ணெயை ஏற்றிவரும் மற்றொரு கப்பல் இம்மாதம் 16-ம் திகதி இங்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணெக் கார்ப்பரேஷன் எண்ணெயை விரைவில் விநியோகம் செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்துவருகிறது.

## பி. ஓ. ஏ. ஸி. விமானம் பலாலியில் இறங்கியது

காங்கேசன்துறை, செவ்வாய்

சிங்கப்பூரிலிருந்து கொழும்புக்குச், சென்றுகொண்டிருந்த பி. ஓ. ஏ. ஸி. பெரிய விமானமொன்று எதிர்பாராத வகையில் காங்கேசன்துறை விமான நிலையத்தில் நேற்று திங்கட்கிழமையிரவு இறங்கியது. 82 பிரயாணிகளுடன் இந்த விமானம் இன்று அதிகாலை இரண்டு மணிக்குக் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றது.

## கிரிமினல் சட்ட மசோதா -இன்று செனட்டில் நிறைவேறும்?

கொழும்பு, செவ்வாய்

கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதாவை நீதிமந்திரி செனட்டர் சாம். பி ஸி. பெர்னான்டோ இன்று செனட்சபையில் சமர்ப்பித்தார். இந்த மசோதா நாளை மூன்றாவது தடவையாகவும் நிறைவேற்றப்படவேண்டுமென்று தாம் கோரப்போவதாக நீதிமந்திரி இன்று சபையில தெரிவித்தார்.

செனட்சபையின் இன்றைய கூட்ட நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக பிரமுகர்கள் காலரியில் கனடாவில் முன்னாள் இலங்கை ஹைகமிஷனராகப்பதவி வகித்த சேர். வேலுப்பிள்ளை குமாரசாமியும் சீமாட்டி குமாரசாமியும் வந்திருந்தனர். இன்றைய செனட்சபைக் கூட்டத்தில் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் கலந்துகொண்டார்.

தலைவர் திரு. சரத் விஜயசிங்கா தலைமையில் செனட் சபை இன்று பிற்பகல் கூடியது.

ஜனப்பிரதிநிதிகள் சபையில் நீண்டநேரம் விவாதித்து கமிட்டி நிலையில் திருத்தம்செய்யப்பட்ட கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதாவை நீதி மந்திரி செனட்டர் சாம் பி. ஸி. பெர்னண்டோ சபையில் சமர்ப்பித்தார்.

இந்த மசோதாவை இன்று இரண்டாவது தடவையாகச் சமர்ப்பிக்கும்பொழுதுமசோதா மூன்றாவது தடவையாகவும் நாளை நிறைவேற்றப்படவேண்டுமெனத் தாம் கோரப்போவதாக நீதிமந்திரி முன்னறிவித்தல் கொடுத்தார்.

சபைமுதல்வரும் சுகாதார மந்திரியுமான செனட்டர் ஏ. பி. ஜெயசூரியா பேசுகையில் இதுவிஷயம்பற்றி எதிர்க்கட்சித் தலைவருடன் கலந்தாலோசித்ததாகவும் மசோதாவை மூன்றாவது முறையாகவும்சபையில் நாளைகொண்டுவருவதற்குத் தமக்கு ஆட்சேபமில்லையென்று எதிர்க்கட்சித் தலைவர் செனட்டர் டி. சூசா தெரிவித்ததாகவும் கூறினர்.

செனட்டர் மாணிக்கம் பேசுகையில் மசோதா மூன்றாவது தடவையாகவும் நாளை சபையில் நிறைவேற்றமுடியாதுபோனால் நிலைமை என்ன என்று கேட்டார்.

வேறொரு தினத்தில் மசோதாவை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவேண்டி நேரிடும் என்று தலைவர் பதிலளித்தார்.

சபை முதல்வரும் எதிர்க்கட்சித் தலைவரும் நாளை மீண்டும் இவ்விஷயம்பற்றி ஆலோசித்து ஒரு சமரச ஏற்பாட்டுக்கு வரலாம் என்று தலைவர் மேலும் கூறினர்.

## சேர் ஒலிவர் லண்டன் பிரயாணம்



கொழும்பு, செவ்வாய்

சுதந்திர இலங்கையில் கவர்னர் ஜெனரல் பதவி வகித்த முதலாவது இலங்கையரான சேர். ஒலிவர் குணதிலகா நாளை புதன் கிழமை மாலை 5-10 க்கு லண்டனுக்குப் பிரயாணமாகிறார்.

விமானத்தில் லண்டனுக்குப் பிரயாணம் செய்யும் சேர். ஒலிவர் லண்டன் செல்லும் வழியில் பாரிசில் சில தினங்கள் தங்குவாரென்று தெரிகிறது.

செனட்

## கிராமசபைகள் மசோதா விவாதம்

கொழும்பு, செவ்வாய்

செனட்சபை அதன் தலைவர் திரு சரத் விஜயசிங்கா தலைமையில் இன்று மீண்டும் கூடியபொழுது கிராமசபைகள் திருத்த மசோதாமீது மீண்டும் நடைபெற்றது.

இதன்பின் சபை நாளைபுதன் கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டது.

## காங்கிரஸ் பேச்சுவார்த்தை

கொழும்பு, செவ்வாய்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசும் மத்திய குழு ஒன்றின் கீழ் பழையபடி தனித்தனியாகப் பிரிந்துபோவது சம்பந்தமாக இன்று நடைபெற்ற இணைப்புக் கமிட்டிக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 10 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது நாளை மாலையில் ஒரு கூட்டறிக்கை வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மீண்டும் ஓட்டுக்கள் எண்ணப்படும்

புதுடில்லி, மார்ச் 6

உத்தரபிரதேசத்தில் இரு தொகுதிகளில் மீண்டும் ஓட்டுக்களை எண்ணுமாறு தேர்தல் கமிஷனர் திரு. சுந்தரம் உத்தரவிட்டிருக்கிறார்.


### தேவை

தகுதிவாய்ந்த செல்வாக்குள்ள சொந்த ஊரிலேயே வசிப்பவர்கள் கீழ்க்கண்ட இடங்களுக்குப் பிரதிநிதிகளாகத் தேவை. பருத்தித்துறை, மீசாலை, கொடிகாமம், இணுவில், சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பளை, காங்கேசன்துறை மற்றும் நயினர்தீவு, புங்குடுதீவு முதலான தீவுப்பகுதிகளுக்கும். முதல் கொமிஷன் மாத்திரம் கொடுக்கப்படும் காரியதரிசி, அந்தியகால சகாய நிதிச் சங்கம், 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் கிரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர். கைலாசபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்


## நீர்கொழும்பு விவேகானந்த மண்டபம்பற்றிய சர்ச்சை

### மார்ச் 12ல் விசாரணை நடைபெறும்

கொழும்பு, செவ்வாய்

நீர்கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தின் மண்டபம் சம்பந்தமாக எழுந்த தகராறு குறித்து விசாரணை நடத்த கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. இந்த விசாரணை இம்மாதம் 12-ம் திகதி நடைபெறும்.

விசாரணையை கல்வி அமைச்சின் உயர்தர உதவிக் காரியதரிசி டாக்டர். ஆனந்த குருகே நடாத்துவார்.

சித்திவிநாயகர் ஆலய அதிகாரிகளுக்குச் சொந்தமான இப்பாடசாலை 1954-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இயங்க ஆரம்பித்தது. இதற்குப் பின்னர் இப்பாடசாலை கொழும்பு விவேகானந்த சபையினரிடம் நன்கொடையாக வழங்கப்பட்டது. நீர்கொழும்பிலுள்ள யாழ்ப்பாண தமிழ் மக்களினாலும் செட்டிமார் சமூகத்தினாலும் மேலதிகமாக இரண்டு கட்டிடங்கள் நிறுவப்பட்டது.

1960-ம் வருடம் நவம்பர் மாதம் 14-ம் திகதி பிரதான மண்டபத்தை பாடசாலையின் ஒரு பகுதியென விவேகானந்த சபை கருதியது. ஆனால் 28-11-60-ல் குறிப்பிட்ட அந்த மண்டபத்தை சபை மூடிவிட்டு அங்கிருந்த குழந்தைகளை மற்றைய இரண்டு கட்டிடங்களுக்கும் மாற்றியது. அதுகுறித்து பெற்றோர், கல்விமந்திரிக்கும் டாக்டர் குருகேயுக்கும் முறையிடவே, குறிப்பிட்ட மண்டபம் பாடசாலை வசம ஒப்படைக்கப்படல் வேண்டும் என இலாகா அறிவித்திருந்தது. ஆனால் இது வெற்றிபெறவில்லை.

பாடசாலையுடன் மண்டமத்தையும் சேர்த்துக் கொள்ளும்படி, பெற்றோர் ஆசிரியர் சங்கம் கல்வி இலாகவை வேண்டியது. இச்சமயத்தில், பாடசாலையின் முன்னாள் உரிமையாளர்கள் மற்றுமொரு கட்டிடத்தை நிறுவினர்.

பாடசாலையை அரசாங்கம் பொறுப்போற்றது சம்பந்தமான ஆடர் பெற்றோர் ஆசிரியர் சங்கத்துக்கு கிடைத்ததும் சங்கம் ஆச்சரியப்பட்டது! காரணம், பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றது சம்பர்தமான ஆடரில், குறிப்பிட மண்டபம் சேர்க்கப்படவில்லை. இதுகுறித்து, சங்கம் மீண்டும் டாக்டர் குருகேயிடம் முறையிட்டது. பின்னர் புதிய கட்டடத்தை டாக்டர் குருகே திறந்துவைத்தார்.

பெற்றோர் மீண்டும் கண்டனம் தெரிவித்து அவர்களது குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்ப மறுத்துள்ளனர்.

## பாடசாலைகளில் வைத்திய சோதனை

### சரிவர நடைபெறவில்லை

கொழும்பு, செவ்வாய்

பாடசாலைகளில் வைத்திய பரிசோதனை சரியான முறையில் நடைபெறுவதில்லையென்றும் பல பாடசாலைகளில் வைத்திய பரிசோதனை நடைபெறவில்லையென்றும் கல்வி இலாகா அதிகாரிகளுக்கும் சுகாதார இலாகா அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற மகாநாடொன்றில் தெரிவிக்கப்பட்டது. இம் மகாநாட்டுக்கு கல்வி உதவி டைரக்டர் டாக்டர் எச். எஸ். ஆர். குணவர்த்தன தலைமை வகித்தார்.

இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி சுகாதார சேவைகள இலாகா டைரக்டரை கேட்பதென்று மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது. பாடசாலைகளில் ஒழுங்கான முறையில் வைத்திய பரிசோதனை நடைபெற வழிவகுக்க வேண்டுமெனவும் இதற்கு சுகாதார அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டுமென டைரக்டரைக் கேட்பதென்றும் முடிவு செய்யப்பட்டது

## நாஸாலாந்தில் பாடசாலைகளை அரசாங்கம் மேற்கொள்ளும்

### டாக்டர் பண்டா அறிவிப்பு

நயாஸாலோன், மார்ச் 6

மஸாவிகாங்கிரஸின் (ஆளும் கட்சி) தலைவர் டாக்டர் ஹேஸ்டிங்ஸ பண்டா, நாட்டிலுள்ள மிஷன் பாடசாலைகளைப் பொறுப்பேற்கத் திட்டமிட்டிருக்கிறார்.

மாபெரும் கூட்டமொன்றில் டாக்டர் பண்டா பேசுகையில் பின்வருமாறு தெரிவித்தார். இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தையும் பாடசாலைக்குச் செல்லவேண்டும். அக்குழந்தை கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரி, முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும்சரி குழந்தைகளுக்குக் கல்விதான் முக்கியம். முட்டாள்தானமான சில மிஷனரிகள் ஒரு குழந்தை பாடசாலைக்குப் போகு முன்னரே கிறிஸ்தவக் குழந்தையாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துவதால் போர்ட் ஜான்ஸன் போன்றபகுதிகள் கல்வி ஞானமற்ற இடமாகிவிடும். புதிய கல்வி மசோதா ஒன்று கொண்டு வருவதின் மூலம் முதல்தர, இரண்டாந்தர பாடசாலைகளுடன் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகளும் தொழில் நுட்ப பாடசாலைகளும் அதிகரிக்கப்படும்.

டாக்டர் பண்டா மேலும் கூறியதாவது: இந்நாட்டில் எந்த எதிர்க்கட்சியும் தோன்ற வழியிருக்காது. அரசாங்க இலாகாக்கள் யாவற்றையும் ஆபிரிக்கர்களது நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருவார்கள். ஐரோப்பியர்கள் தங்களது நியாயமான சலுகையை நிறுத்த நாங்கள் விரும்பவில்லை. ஆனால் அவர்கள் தனியார் துறையில் ஏகபோகமேலாதிக்கம் செலுத்துவதைத்தொடர்ந்து அனுமதிக்க முடியாது.

## தமிழில் ஏராளமான நூல்களை வெளியிட வேண்டும்

### ஸ்ரீ காமராஜ் ஆவல்

#### அரசாங்க தமிழ் நூல் பிரசுர நிலைய துவக்க விழா

சென்னை, மார்ச 6

தமிழில் எல்லாவிதமான விஷயங்களைப்பற்றியும் ஏராளமான நூல்களைவெளியிடவேண்டுமென்று முதன்மந்திரி ஸ்ரீ கே. காமராஜ் இன்று இங்கு விருப்பம் தெரிவித்தார்.

சென்னை அரசாங்கம் நிறுவியுள்ள தமிழ் நூல்கள் பிரசுர நிலைய துவக்க விழாவில் அவர் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவ்வாறு தெரிவித்தார்.

சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களோடு மட்டுமின்றி சொந்த முறையில் சிறந்த நூல்களை வெளியிடுவதற்கும் தமிழ் எழுத்தாளர்களுக்கு நல்ல வாய்ப்புள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்கள்படிப்பதற்காக வெறும் பாடப்புத்தகங்களுக்கு மட்டும் தேவைஅதிகரித்து வருவதோடு மட்டுமல்லாமல், சாதாரணமாக படிப்பவர்கள்பள்ளிகளுக்குச் செல்லாமல் பயிலுவதற்கேற்ப எளிய நடையில் எழுதப்பட்ட தமிழ் நூல்களின் தேவையும் அதிகரித்து வருகிறதுஎன்ருர் அவர்.

நிலையத்தைக் கல்வி மந்திரி திரு. ஸி. சுப்ரமண்யம் துவக்கி வைத்துப்பேசினர். எந்த தமிழ் எழுத்தாளரும் இச் சபையை அணுகி நிதியுதவி பெறலாம் என்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்களாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை என்றும், இதற்காக ரூ. 10லட்சத்துக்கு வகை செய்யப்பட்டுள்ளது. என்றும் அவர் தெரிவித்தார் இத்தொகை ஆரம்பக்கட்டத்துக்காகவே வழங்கப்பட்டுள்ளதென்ருர். செகரடேரியட் இலாகாத் தலைமைக் காரியாலயங்களில், தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கு இன்னும் இரண்டு அல்லதுமூன்று ஆண்டுகள் ஆகும் என்ருர்.

தமிழைப் போதனாமொழியாகக் கொள்வதைப்பற்றி அவர் குறிப்பிடுகையில் எல்லா கல்லூரிகளிலும் தமிழ் மொழியில் பாடங்களைப் போதிப்பதற்கு சர்வகலாசாலை அதிகாரிகள் முட்டுக்கட்டைபோட முடியாத கட்டம் தற்போது ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

கல்வி டைரக்டர் ஸ்ரீ என். டி. சுந்தரவடிவேலு நன்றிகூறினர்.

## உங்கள் தினப்பலன்

சோதிடஆசான் செ. பதல்லியூர்

பிலவ ஆண்டு மாசிமாதம் 24-ந் தேதி புதன்கிழமை (7-3-62) பகல் 2-11 வரை பிரதமை. பகல் 11-15 வரை பூரட்டாதி. பின் உத்திரட்டாதி. பகல் 12-05 வரை மரணயோகம். பின் சித்தயோகம். பொது வர்த்தகருக்கும் ஆபரணதிகள் வியாபாரம் செய்பவர்களுக்கும் நன்மையுண்டு, வாங்க விற்க நலம்.

### இன்றுபிறந்தவர்களுக்கு

இவர்களுக்கு இவ்வாண்டில் மனச் சஞ்சலம், முயற்சிகளில் தடை, சண்டை சச்சரவுகள், குடும்பக் கஷ்டங்கள், நீண்ட பிரயாணங்கள் ஆகியனவுள. தேக நலத்தை ஓரளவு பேணி நடத்தலும், செலவை மட்டுப் படுத்தலும் அவசியம். வர்த்தகத்தினருக்கு வருவாய் குறைவாக இருக்கும். புதியன முயற்சிக்க வேண்டாம். வருங்காலம் நற்பலன் தரும். பெண்களுக்குநற்பலன்களுள. தெய்வ வழிபாடு செய்க.

### நட்சத்திரப்பலன்

அச்சுவினி: சுபசெய்தி தெய்வ வழிபாடு.

பரணி: உறவினர் பகை, மனநிம்மதியினம்.

கார்த்திகை: அலைச்சல், பணவரவு.

ரோகிணி: பெரியோர் சந்திப்பு, பணமுடை.

மிருகசீரிடம்: நண்பர் கொண்டாட்டம், சுபசெய்தி.

திருவாதிரை: குடும்ப நிம்மதி, வீண் செலவு.

புனர்பூசம்: அலைச்சல், செலவு அதிகம்.

பூசம்: தொழில் நலம், பணவரவு.

ஆயிலியம்: வாக்கு வெற்றி, வித்தையுயர்ச்சி.

மகம்: சுகக்குறைவு, செலவு.

பூரம்: சகோதர உதவி, பணமுடை.

உத்தரம்: பெரியோர்சோபம், அவசர நடத்தை.

அத்தம்: புத்தி சாதுரியம், பணமுடை நீக்கம்.

சித்திரை: தெய்வவழிபாடு, இலாபம்.

சுவாதி: பிரயாண சுகம், கஷ்டநிவர்த்தி.

விசாகம்: கடும் உழைப்பு, சுபசெய்தி.

அனுஷம்: தெய்வவழிபாடு, நன்மை.

கேட்டை: நல்லோர் நட்பு, இலாபம்.

மூலம்: பிதுருவழி தொடர்பு, நன்மை.

பூராடம்: மாதுருதொடர்பு, சந்தோஷம்.

உத்தராடம்: கௌரவத்தடை, பணமுடை.

திருவோணம்: தொழில்நலம், பணமுடை.

அவிட்டம்: கடும் உழைப்பு, நல்லோர் நட்பு

சதயம்: நல்லோர் நட்பு, பணவரவு.

பூரட்டாதி: காரியத்தடை, பணமுடை.

உத்தரட்டாதி: தெய்வவழிபாடு, கடும் உழைப்பு.

ரேவதி: தெய்வவழிபாடு, செய்தொழில் வெற்றி.


போலிகளில் ஏமாறுதீர்கள்!

டயரும்ஸ்

ஸ்தாபனத்தாரிடம்

உண்மையான

"கடாவ் வொயில்"

சேலைகளை

தெரிந்தெடுங்கள்

30 க்கு மேலான சிறந்த டிசைன்களில் உண்டு

விசேஷ இறக்குமதி!

ஹான்ட்லூம்ஸ் சில்க் கம்பளங்கள்

கல்யாணப் பரிசளிப்புகளுக்கு உகந்தவை

அளவு 60×90",—விலை 67-50 மாத்திரம்

டயரும்ஸ்

யாழ்ப்பாணம்.

# வெளிநாட்டு மந்திரிகள் கூட ரஷ்யா இணங்கியது!

## உச்சி மகாநாட்டு யோசனையிலிருந்து வாபஸ்

லண்டன், மார்ச் 6

**வருகிற 14ந் திகதி ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஆயுதப்பரிகரண மகாநாட்டை 18 நாடுகளின் வெளிவிவகார மந்திரிகள் ஆரம்பித்து வைக்கவேண்டுமென்ற மேற்குநாடுகளின் யோசனைக்கு ரஷ்யா சம்மதம் தெரிவித்துவிட்டது. இது சம்பந்தமான அறிவிப்பு வாஷிங்டனிலும், லண்டனிலும் அதிகார பூர்வமாக வெளியிடப்பட்டது.**

இம் மகாநாடு 18 நாடுகளின் தலைவர்களைக் கொண்ட உச்சி மகாநாட்டாக இருக்க வேண்டுமென ரஷ்யா வற்புறுத்தி வந்தது அனைவருக்கும் தெரியும்.

இதே சமயம் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஆகியவற்றின் வெளிநாட்டு மந்திரிகள் கூடிப் பேசவும் ரஷ்யா இணக்கம் தெரிவித்துள்ளது.

முதலில் வெளிநாட்டு மந்திரிகள் கூடிப்பேசி அதனால் நற்பலன் ஏற்படும் பட்சத்தில், பிறகு ஜனாதிபதி கென்னடியும், தாமும், திரு. குருஷ்சேவைச் சந்தித்துப் பேச சாத்தியம் ஏற்படுமென பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லன் கூறியிருந்தார்.

ரஷ்ய அணு சோதனைகளின் விளைவாக உபயோககரமாக பல தகவல்கள் கிடைத்திருப்பதாயும், எனவே அமெரிக்கா மீண்டும் சோதனை நடத்தாமல் இருப்பது சாத்தியமில்லை என்றும் திரு. மாக்மில்லன் கூறினர்.

தலைவர்கள் சந்திக்கும் முன்பு, வெளிநாட்டு மந்திரிகள் கூடிப்பேச வேண்டும் என மேற்கு நாடுகள் முன்பு ரஷ்யாவுக்குத் தெரிவித்திருந்தன. ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோ விரைவில் ஜெனிவா புறப்படுவார் என்றும், மேற்கு நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகளுடன் பேச அவர் தயாராய் இருப்பார் என்றும் சோவியத் பிரதமர் அறிவித்துள்ளார்.

## பலநோக்குச் சங்கத்தில் திருட்டு

ஊர்காவற்றுறை, செவ்வாய்

சரவணை - வேலணை பலநோக்குச் சங்கத்தில் 650 ரூபா கடந்த 3-ந் திகதி களவாடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. திருடர், சங்கக்கட்டிடத்தின் கூரையைப் பிரித்து கூரை வழியால் இறங்கியதாகத் தெரிகிறது. ஊர்காவற்றுறைப் பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்கள். அவர்கள் கைவிரல் அடையாளம் எடுப்பதற்காக உடைந்த ஓடுகள் சிலவற்றை தங்களுடன் எடுத்துச் சென்றிருக்கின்ருர்கள். இச்சங்கக் கட்டிடம் இரண்டு மாதங்கட்கு முன்னர்தான் பூர்த்தியாகி வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது.

——

## தர்மாச்சிரமம்

தொண்டைமனாறு, செவ்வாய்

வருகிற 11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கை தர்மாச்சிரமத்தின் முதலாம் ஆண்டுக் கூட்டம் நடைபெறும்.

# ஐ. நா. துருப்புக்கள் கடாங்கா துருப்புக்களைத் தாக்கினவாம்

## ஷோம்பே கூற்று

எலிஸபெத்வில்லி, மார்ச் 6

காமினு தளத்திலுள்ள ஐ. நா. துருப்புக்கள், கடாங்கா துருப்புக்கள் மீது திடீரென தாக்கியதாயும், இதைத் தொடர்ந்து இருதரப்பினரிடையேயும் நீடித்த சண்டை நடைபெற்றுவருவதாயும் திரு. ஷோம்பே அறிவித்திருக்கிருர். இரு தரப்பினரிடையேயும் அதிகமான உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதாயும் திரு. ஷோம்பே கூறினர். ஆனல் ஐ. நா. வட்டாரங்கள் இது பற்றித் தமக்குத்தகவல் இல்லை எனக் கூறின.

# 10,000 ஏழைப் பிள்ளைகளின் சமூக அந்தஸ்து

## உயர்த்தும் முயற்சி பாதிக்கப்பட்டுள்ளதாம்

கொழும்பு, செவ்வாய்

சுமார் 10,000 ஏழைப் பிள்ளைகளின் சமூக அந்தஸ்தை உயர்த்துவதற்கென அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் குழந்தைகளுக்கு கல்வி வசதி இல்லாததே இதற்குக் காரணமாகும்.

இதுபற்றி சமூக சேவைகள் டைரக்டர் திரு. பி. டி. உடுவெல தெரிவிக்கையில், குறிப்பிட்ட குழந்தைகளின் நலன் கருதி இலாகா ஏராளமான பணம் செலவழித்தும் அவர்களின் வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்த வழிவகைகள் எதுவும் செய்யப்படவில்லை என்றும் சமூக சேவைகள் இலாகாவின் முக்கிய கடமை அந்தக் குழந்தைகளுக்குத்தொடர்ந்துஉதவி செய்வதே என்றும் கூறினர்.

ஏழைக் குழந்தைகளுக்குப் போதிய கல்வி வசதியை அளிப்பது கல்வி இலாகாவின் பொறுப்பாகும் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் ஏழைக் குழந்தைகள் ஏழையாகவே இருப்பார்கள். இந்தக் குழந்தைகளுக்கு தனிப்பட்ட பாடசாலைகள் அமைக்கப்படவேண்டும் என்றும் அவர் மேலும் கூறினர்.

——

## கான்ஸ்டபிள் மீது அசிட் வீசிய வழக்கு

மாவிட்டபுரம், செவ்வாய்

காங்கேசன்துறை பொலிஸ் நிலைய விடுதியில் சென்ற வருடம் நவம்பர் மாதம் 7-ம் திகதி இரவு நித்திரைசெய்து கொண்டிருந்த காங்கேசன் துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் நிமால் மாகேந்திரசிறி என்பவர்மேல் அசிட் வீசி அவரைக் கொலைசெய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்குமீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது காங்கேசன் துறை பதில் வைத்திய அதிபர் திரு. ஏ. அருளம்பலம் சாட்சியமளித்தார்.

"அவர் தமது சாட்சியத்தில் சென்றவருடம் நவம்பர்மாதம், 8-ம் திகதி நான் மகேந்திரசிறியை பரிசோதனை செய்தேன். அவர் காங்கேசன் துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நான்கு மணித்தியாலங்களின் பின் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார். அவரைப் பரிசோதனை செய்தபோது அவரது உயிர் மோசமான நிலையில் இருக்கவில்லை. அவரின்மேல் காணப்பட்ட காயங்கள் அசிட் வீசப்பட்டதனால் உண்டான காயங்களாக இருக்கலாம்".

நீதிபதி மேல் விசாரணையை இம்மாதம் 14-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

——

## விமான விபத்து: 111 பேர் பலி!

லண்டன், மார்ச் 6

டுவாலா கெமருன் என்ற இடத்தில் பிரிட்டிஷ் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதால். விமான சிப்பந்திகள் உட்பட 111 பிரயாணிகள் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.

# பர்மாவுக்கு புதிய அரசியல்சாசனம்

## வேலைகள் விரைவில் ஆரம்பமாகும்

ரங்கூன், மார்ச் 6

**பர்மிய புரட்சிச் சபைத் தலைவர் ஜெனரல் நேவின் நாட்டுக்குப் புதிய அரசியல் சாஸனம் வகுக்கும் வேலைகள் ஆரம்பமாகும் எனத் தெரிவித்துள்ளார்.**

ஜெனரல் நேவின் பர்மாவில் 14 அரசியல் கட்சித்தலைவர்களைச் சந்தித்துப் பேசியபின், நாட்டுக்கு உரிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் வகையில் புதிய சாஸனம் வகுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

விவசாயத்துக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும், சோஷலிஸ முறையில் தொழில் அபிவிருத்தி நடத்தப்படும் என்றும் அவர் கூறினர். இப்போதைய அரசியல் சாஸனத்தில் பல குறைபாடுகள் இருப்பதாயும் அவர் தெரிவித்தார்.

## நேபாள மூன்றுண்டு திட்டம்

காட்மாண்டு, மார்ச் 6

நேபாளத்தில் 3 ஆண்டு அபிவிருத்தித்திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 1000 மைல் நீள சாலை போடப்படும். 4 விமான நிலையங்களும் 30 சிறுவிமானத்திடல்களும், 3 ஆஸ்பத்திரிகளும் நிர்மாணிக்கப்படும். 60,000 மாணவருக்குக்கல்வி வசதிகள் அளிக்க வழி செய்யப்படும்.

# ஜெர்மன் சர்வகலாசாலையில் தமிழ் போதனை

## ஹிந்தி, உருதுமொழிகளும் போதிக்கப்படும்

ஹிடல்பர்க், மார்ச் 6

எல்லா ஜெர்மன் சர்வகலாசாலைகளிலும மிகவும் புகழ் பெற்றதான ஹிடல்பர்க் சர்வகலாசாலையில் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு ஸ்தாபனம்ஏற்படவிருக்கிறது அதன் பெயர் இந்தியா-ஆசியா ஸ்தாபனமாகும். இந்திய ஆசிய நாடுகள் பற்றிய பலதுறைகள் குறித்தும் இந்த ஸ்தாபனத்தில் போதிக்கப்படும். இந்த ஸ்தாபனம் இருக்கும் ராஜ்யமான பேடன் உரெட்டம்பர்க் இதற்கான கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக டென்டர்கள் கோரியிருக்கிறது. நான்கு "டிசைன்கள்" இதுவரை அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன. கட்டடத்திற்காக ஆகும் செலவை இந்த அரசாங்கமே கொடுக்கவிருக்கிறது. இப்போதுள்ள சர்வகலாசாலையைச் சேர்ந்த மாணவர் ஹஸ்டல்களுக்கருகில் இந்தககட்டிடம் கட்டப்படும்.

இந்த ஸ்தாபனத்தில் இந்தியா பற்றிய விஷயங்கள், இந்திய மொழிகளான ஹிந்தி உருது, தமிழ் முதலியவைகள், விவசாயம் சமபந்தமான விளக்கங்கள், சரித்திரம், தத்துவசாஸ்திரம், வைத்தியம் முதலிய எல்லாவற்றையும் பற்றி விரிவாகப் போதிககப்படும் இந்தியா பற்றிய விஷயங்களில் ஆராய்ச்சிகள் நடத்தவும் வசதிகள் செய்யப்படும. இந்த ஸ்தாபனத்தைத் தவிர்த்து சர்வதேச கல்லூரி ஒன்றும ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய விஷயங்கள் குறித்துப் போதிக்கப்படும். இது சர்வகலாசாலைக்குட்பட்டதாக இல்லாத போதும் அதனுடன் நெருங்கி ஒத்துழைத்துச் செயல்படும்.

படிப்பு மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இந்திய அரசாங்கம் விரும்பியபடி அதன் விஞ்ஞானிகள் பலருக்கு ஹிடல்பர்ககில் பயிற்சி அளிகக முடியும். இந்தியாவின் கருத்தையும் விருபபங்களையும் பறறி அறிய ஹிடல்பர்க் சர்வகலாசாலையைச் சேர்ந்த கோஷ்டியொன்று இந்தியாவிற்குச் சென்றுள்ளது. இந்தியாவிற்குச் சென்று சேவை செய்யும் ஜெர்மன் விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், அரசியல் வாதிகள இதர நிபுணர்கள் ஆகியோருக்கு இந்தயா பற்றி சகல விவரஙகளையும் இந்திய ஆசிய ஸ்தாபனம் போதித்து அவர்களுக்கு இந்தியாவை நன்கு அறிமுகப்படுத்தும். சீக்கிரமே இந்திய ஆசியக் கல்லூரி ஒன்றும் ஸ்தாபிக்கப்படவிருக்கிறது.

இன்னும் இரண்டு வருஷ காலத்துல் இந்த ஸ்தாபனம் முழு மூச்சுடன வேலைசெய்ய ஆரம்பித்துவிடும். இந்தப் பொறுப்பை நிர்வகிக்கவும் ஹிடலபர்க் சர்வகலாசாலையில் தத்துவசாஸ்திரத்துறைத் தலைவர் பதவி ஏற்கவும் இந்தியா பற்றிய விஷயங்களில் நிபுணரான பேராசிரியர் டாக்டர் லட்விக் அல்ஸ்டார்ப் என்பவர் அழைக்கப்பட்டிருக்கிருர். அவர் இபபதவியை ஏற்க சம்மதிப்பார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

# ஓ. ஏ. எஸ். பயங்கர ஸ்தாபன தலைவர்கைது?

## அல்ஜீரிய சம்பாஷணை பற்றி முன்ஜாக்கிரதை

பாரிஸ், மார்ச் 6

அல்ஜீரியா சமாதானப் பேச்சின் இறுதிக் கட்டம் நாளை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஓ. ஏ. எஸ். பயங்கரவாதிகள், பிரதிநிதிகளைத் தாக்கக் கூடுமாதலால் துருப்புக்கள் அவர்களைக் காவல் செய்யும். அல்ஜீரியாவில் நேற்று 200 குண்டுகள் வெடித்தன.

ஓ. ஏ. எஸ். பயங்கர ஸ்தாபனத்தின் தலைவர் கைது செய்யப்பட்டிருபபதாயும் ஒரு செய்தி கூறுகிறது.

## நகைகளை திருடியதாக வழக்கு

மாவிட்டபுரம், திங்கள்

மாத்தறையைச் சேர்ந்த சைமன் லியனகேராஜா, தையிட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் பொன்னுச்சாமி ஆகிய இருவரும் புன்னாலைக்கட்டுவனில் பல வீடுகளில் 2000 ரூபாய் பெறுமதியான நகைகளைத திருடியதாக சுன்னாகம் பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்குப் பின் நீதிபதி வழக்கை மேல் கோர்ட்டிற்குப் பாரப்படுத்தினர்.

### மணி வாக்கு

வானமும் பூமியும் தோன்றியிருக்கின்றன. மொழிகளும் வர்ணங்களும் மாறுபட்டிருக்கின்றன. இவை ஆண்டவன் விருப்பப்படியே அமைந்திருக்கின்றன.

—நபிகள் நாயகம்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மாசி மீ 24 உ (7 - 3 - 62)


## இ. தொ. கா. பிரிவினை

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மீண்டும் இரு 'யூனியன்' களாகப் பிரிவினையாகும் செய்தியைக் கேட்டு மிக வருந்துகிறோம். இது குறித்து சம்சந்தப்பட்ட தலைவர்களோ, தொழிலாளரோ மகிழ்ச்சியடைய முடியாது. 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே' என்பது அவர்கள் அறியாததல்ல.

1939-ம் வருடம் நேருஜி இலங்கைக்கு விஜயம் செய்தபோது, இங்கு பிரிந்திருந்த பல இந்தியத் தலைவர்களையும் ஒன்று சேர்த்து "இலங்கை இந்திய காங்கிரஸ்" என்ற ஸ்தாபனத்தை அமைத்துக் கொடுத்தார். பின்னர் தொழிலாளர் யூனியனும் அமைக்கப் பெற்றது. இதனால் தோட்டத் தொழிலாளருக்கு புதிய பலம் ஏற்பட்டதுடன், தங்கள் நல உரிமைகளுக்காக ஒன்றுபட்டு ஒரு ஸ்தாபன மூலம் போராட முடிந்தது. பின்னர் இலங்கை சுதந்திர நாடானதும், 'இலங்கை ஜனநாயக காங்கிரஸ்' என்று அதன் பெயரை மாற்றியதுடன், அத்துடன் இணைந்திருந்த தொழிற் சங்கத்துக்கு "இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்" என்று புதுப் பெயர் அளிக்கப்பட்டது.

இவ்விரு ஸ்தாபனங்களிலும் பல லட்சம் பேர்கள் சேர்ந்து தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பலம் பொருந்தியவையாக அவை விளங்கியதுடன், குறித்த மக்களுக்குப் புத்துணர்ச்சியும் புது பலமும் அளித்து உதவின.

பின்னர் துரதிருஷ்டவசமாக தலைவர்களிடையே வேற்றுமை ஏற்பட்டதும், ஸ்தாபனம் இரண்டுபட்டது. திரு தொண்டமானைத் தலைவராகக் கொண்ட பகுதி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்றும், திரு. அஸீஸைத் தலைவராகக் கொண்ட பகுதி ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்றும் பிரிந்தன. இப்பிரிவினையின் பயனாக, தோட்டங்களில் தொழிலாளரிடையேயும் பிரிவினை ஏற்பட்டு, அடிதடிகளும் கொலைகளும் நடந்தன. இதற்கிடையே மலைநாட்டிலே வேறு பல தொழிலாளர் யூனியன்களும் தோன்றி, தொழிலாளரைப் பங்கு போட்டுக் கொண்டன. பல யூனியன்களிடையே தகராறுகள் அதிகரித்து, வரவர தொழிலாளர் நிம்மதியாக வாழமுடியாதும் போயிற்று.

நிலைமை மோசமாவதை மேற்குறித்த இரு தலைவர்களும் உணர்ந்து, சமரசப் பேச்சுகள் நடத்தி, சென்ற ஆண்டிலே ஒன்றுபட்டனர். தொழிலாளரும் மகிழ்ச்சியுடன் புது நம்பிக்கை கொண்டனர். ஆனால் திருஷ்டி பட்டுவிட்டதோ என்னவோ, சமீப காலமாக வேற்றுமைகள் மீண்டும் கிளம்பியதாகவும் அதனால் இரு தலைவர்களும், மீண்டும் பிரியத் தீர்மானித்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இப்பிரிவினையால் தொழிலாளரின் நிலைமை மீண்டும் மிக மோசமடையுமோ என்று அஞ்சப்படுகின்றது. மற்ற யூனியன்கள் ஏற்கெனவே இப்பிரிவினை பற்றி பரிகசிக்கவும், தொழிலாளரை தங்கள் வசப்படுத்தவும் முயற்சிப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஒரே தொழிலில் பல போட்டியூனியன்கள் இருப்பது, தொழிலாளர் கட்சியை மிகப் பலவீனப்படுத்துவதாகும். அதில் மலைநாட்டுத் தொழிலாளரில் பெரும்பாலோரது அரசியல் உரிமைகள் கிடைக்காத நிலையில் இப்பிரிவினைகள் அத்தொழிலாளருக்கு பெரிய சாபத்தீடாகும்.

அதிக தீங்குகள் ஏற்படமுன் தொழிலாளரின் மேலான நன்மையைக் கருதி, தங்கள் வேற்றுமைகளை ஒதுக்கி வைத்து, ஒருதொழிலுக்கு ஒரே யூனியன் என்ற நிலைமையை ஏற்படுத்த, கூடிய சீக்கிரம் தலைவர்கள் தியாக புத்தியுடன் முன்வர வேண்டும்.

நமது புதுடில்லி கடிதம்:

# 3-வது பொதுத் தேர்தலும்

## காங்கிரஸ் நிலையும்

## தி. மு. க. பலப் பெருக்கம் ஒரு பிரச்னை

—(ஈழநாடு நிருபர் டி. சர்க்கார்)—

புதுடில்லி, மார்ச் 4

இந்தியாவின் மூன்றுவது பொதுத் தேர்தல் அமைதியாக முடிவுற்றது. இங்கும் அங்கும் நாட்டில் ஏற்பட்ட சிற்சில சம்பவங்களைத் தவிர, பொதுவாக தேர்தல் பூரணமாக நடைபெற்றிருக்கிறது. கோடிக்கணக்கான மக்கள் இவ்விதம் அமைதியாக வாக்களித்து ஜனநாயகத்தில் தங்கள் நம்பிக்கையை கட்டுப்பாடாக வெளிப்படுத்தியுள்ளனர். எவருக்கும் எவ்வித அச்சமும் இன்றி சுயேச்சையாக வாக்களிப்பதில் அவர்கள் பேருக்கம் காட்டியுள்ளனர். இதற்கு உதாரணமாக அலகாபாத்திலுள்ள திரு. நேருவின் சொந்தத் தொகுதியான புல்பூரைக் குறிப்பிடலாம். சோஷலிஸ்ட் தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோஹியா, பிரதமருக்குக் கிடைத்த வாக்குகளில் கிட்டத்தட்ட பாதி வாக்குகளைப் பெற்றார். பெரிவாரியான வாகளுகளால் பிரதமர் தன் தொகுதியில் வெற்றி பெற்றபோதிலும்கூட, மக்களின் மனப்பான்மையில் ஏற்படும் சாதக பாதகங்களுக்கு உதாரணமாக புல்பூரை அரசியல் வட்டாரங்கள் மதிக்கின்றன. லோகசபையில் காங்கிரஸ் பெரும்பான்மை ஸ்தானங்கள் பெற்றிருப்பது உண்மைதான். ஆயினும் 1957-ம் ஆண்டு தேர்தலில் பெற்ற ஸ்தானங்களைவிட இம்முறை குறைவாகவே அது பெற்றுள்ளது. ஆனால் ராஜ்யங்களில் குறிப்பிடத்தக்க அளவு அதன் மெஜாரிட்டி பலம் குறைந்துள்ளதே இங்கு முக்கிய விஷயம். பார்லிமெண்ட் தேர்தலில் காங்கிரசை வாக்காளர்கள் ஆதரித்தபோதிலும், அந்த அளவுக்கு தங்கள் சொந்த ராஜ்யங்களில் அவர்கள் நடந்துகொள்ளவில்லை. உதாரணமாக ராஜஸ்தான், மத்திய பிரதேசம் ஆகிய ராஜ்யங்களில் ஸ்திரமான அரசாங்கத்தை நிறுவுவதில் அதற்குக் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. ராஜ்யங்களில்காங்கிரசுக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 42·1 சத விகிதமாகும். 1957-ம் ஆண்டு கிடைத்ததைவிட இது 5 சத விகிதம் குறைவானது. இறுதி முடிவின்படி லோகசபையில் எதிர்க்கட்சிகளின் நிலையில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி 29 ஸ்தானங்களைப் பெற்று தனிப்பட்ட முறையில் பெரிய குழுவாய் விளங்கியபோதிலும், அதக்கடுத்த பெரிய குழுவாய் விளங்குவது சுதந்திராக் கட்சியே ஆகும். 19 ஸ்தானங்களை அது பெற்றுள்ளது. ஜனசங்கத்துக்கு 14 ஸ்தானங்களும், பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக்கு 11 ஸ்தானங்களும் கிடைத்துள்ளன. பிரதேச கட்சிகளும் இப்போது நன்கு ஊடுருவியுள்ளன. சென்ற தேர்தலில் ஒரே ஒரு ஸ்தானத்தைப் பெற்றிருந்த திராவிட முன்னேற்றக் கழகம், இப்போது தன் பலத்தை 7 ஆக உயர்த்திக்கொண்டுள்ளது. அகாலிகளுக்கு 2 ஸ்தானங்களும், முஸ்லிம் லீக்குக்கு 2 ஸ்தானங்களும் கிடைத்துள்ளன. எனவே சபை விவாதங்களில் எதிர்க் கட்சிகளின் பல குரலோசைகள் எதிரொலிக்கும்.

* * *

### தமிழ் நாடு

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை கிராம, நகரப் பகுதிகளில் பலமான வாக்களிப்பு நடந்திருக்கிறது. சென்ற தேர்தலில் காங்கிரஸ் 44 சத விகித வாக்குகளைப் பெற்றது. இம்முறை 46 சத விகித வாக்குகளைப் பெற்றும் அதன் பலம் 138 ஆகக் குறைந்துள்ளது. இதற்கு மாறாக 1952-ம் ஆண்டு .4 சத விகித வாக்குகளைப் பெற்ற தி. மு. க. இம்முறை 27 சத விகித வாக்குகளைப் பெற்றுள்ளது. அதாவது 100 சத விகித அதிகரிப்பு. 1957-ம் ஆண்டு தேர்தலில் தி. மு. க. 117 அபேட்சகர்களை நிறுத்தியதில் 15 ஸ்தானங்களே அதற்குக் கிடைத்தன. இம்முறை அது நிறுத்திய 142 அபேட்சகர்களில் 50 பேர் வெற்றிபெற்றதனால் கட்சியின்பலம் வெகுவாக அதிகரித்துள்ளது. கருணாநிதி ஒருவரைத் தவிர மற்ற 49 அங்கத்தினர்களும் புதிதாக சட்டசபைக்கு வந்தவர்கள். சுதந்திராக் கட்சி நிறுத்திய 94 அபேட்சகர்களில் 6 பேரே வெற்றிபெற்றனர். "சுதந்திரா கட்சி சென்னையில் படு தோல்வியடைந்தது" என அதன் தலைவர் ராஜாஜி கூறியது சரியானதே. கம்யூனிஸ்ட் கட்சிக்கு இரண்டு ஸ்தானங்கள் மட்டுமே கிடைத்தன. பிரஜா சோஷலிஸ்ட், தொழிற் கட்சி, ஜனசங்கம், முஸ்லிம் லீக், குடியரசுக் கட்சி ஆகியன சபையில் அடியோடு வேரறுக்கப்பட்டுள்ளன. இக்கட்சிகளின் பல தலைவர்கள் தோல்வியடைந்தனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலப் பெருக்கம் டில்லியிலும், சென்னையிலுமுள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கு ஒரு ஜீவாதார பிரச்சினையைச் சிருஷ்டித்துள்ளது. தி. மு. க. வின் முக்கிய கிளர்ச்சி "வடநாட்டின் ஆதிக்கத்திலிருந்து மீள, தென்னாட்டை தனியாகப் பிரிப்பதே" ஆகும். இதைச் சமாளிக்கும் வழி என்ன என்பது காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையாகும்.

⁘ ⁘ ⁘

மூன்றுவது பொதுத் தேர்தலில் இரண்டு சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன. சுதந்திரா அபேட்சகராக ஜய்ப்பூரில் போட்டியிட்ட மகாராணி காயத்திரிதேவியும், வட பம்பாயில் காங்கிரசின் சார்பாகப் போட்டியிட்ட பாதுகாப்பு மந்திரி கிருஷ்ணமேனனும் இச் சாதனைகளுக்கு உரியவர்கள. மகாராணி 1,57,692 வாக்குகள் மெஜாரிட்டிபெற்று தன்னுடன்போட்டியிட்ட 10 அபேட்சகர்களின் கட்டுப்பணத்தை இழக்கச் செய்தார். அவருக்குக் கிடைத்த வாக்குகள் 1,92,907. கிருஷ்ணமேனன்தான் அதிகமான வாக்குகளைப் பெற்றார். அவருக்குக் 2,98,427 வாக்குகள் கிடைத்தன.

⁘ ⁘ ⁘

பார்லிமெண்டின் 3 முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்கள் ஸ்தானமிழந்தனர். எஸ். ஏ. டாங்கே (கம்யூனிஸ்ட்), அசோக் மேத்தா (சோஷலிஸ்ட்), என். ஜி. ரங்கா (சுதந்திரா) ஆகியோர்தோல்வியடைந்தது பார்லிமெண்ட் விவாதத்தின் காரசாரத் தன்மைக்கு ஏற்பட்ட நஷ்டமாகும்.

⁘ ⁘ ⁘

மகாராஷ்டிராவில் போட்டியிட்ட காங்கிரஸ அபேட்சகர் திரு. சங்கர்பவாஜ் சவாந்த் சீட்டுக் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கும் அவருடன்போட்டியிட்டபிரஜாசோஷலிஸட் அபேட்சகருக்கும் தலா 12,664 வாக்குகள் கிடைத்தன. எனவே சீட்டுக் குலுக்கல் மூலம் பிரச்சினையைத் தீர்ப்பது என முடிவு செய்யப்பட்டதில் காங்கிரசுக்கு வெற்றி கிடைத்தது.

⁘ ⁘ ⁘

### தியாகராஜர் தினம்

தலைநகரிலுள்ள கர்நாடகசங்கீத சபா தியாகராஜர் தினத்தைக் கொண்டாடியது. ஆராதனையுடன் ஆரம்பமான இவ் விழாவில் வித்துவான்கள் பஞ்ரத்ன கீர்த்தனைகளைப்பாடி செவிக்கு விருந்தளித்தார்கள். சபை வித்துவான்களும் மாணவர்களும் தியாகராஜர் பாடல்களைப் பாடினர். 50 மாணவர்களும், 7 வித்துவான்களும் இந்நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டனர். உயர்தர அரசாங்க அதிகாரிகள் உட்பட ஏராளமானோர் 4 தினங்கள் விழாவில் பங்குபற்றினர். கர்நாடக சங்கீத சபை 1936ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு இப்போது 700 அங்கத்தினர்களைக் கொண்டு விளங்குகிறது. உள்நாட்டு அமைச்சின் உதவிக் காரியதரிசி திரு. ஏ. வி. வெங்கடசுப்பா அதன் தற்போதைய தலைவராகும்.

---

## மேனன் வெற்றிக்கு பஜாஜ் பாராட்டு

பம்பாய், மார்ச் 6

வட பம்பாய் லோகசபைத் தொகுதியில் ஆசாரியா கிருபளானியைவிட லட்சத்து நாற்பது ஆயிரம் வோட்டுகள் அதிகமாக இதுவரை பெற்றுள்ள திரு வி. கே. கிருஷ்ணமேனனை மேனன் எதிர்ப்பு இளைஞர் 'சபை'யின் தலைவர் திரு ராம கிருஷ்ணபஜாஜ் வாழ்த்தியுள்ளார்.

"காங்கிரஸிற்கோ அல்லது நாட்டிற்கோ நன்மை அளிக்காத ஒரு கொள்கையை வாதாடும் ஒருவராக உங்களை நாங்கள் கருதுகிறோம். கொள்கை ரீதியில் இந்த தேர்தல் போட்டி நடத்தப்பட்டது. தனி நபர் விருப்பு வெறுப்புகள் இதில் கிடையாது. இப்பொழுது நீங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டதால், நங்கள் ஜனநாயகவாதிகள் என்ற முறையில் உங்கள் வெற்றிக்காக உங்கள் வெற்றிக்காக உங்களை பாராட்டுகிறோம்" என்று திரு. மேனுக்கு தந்திமூலம் தன்பாராட்டுதலை திரு. ராமகிருஷ்ணபஜாஜ் அறிவித்திருக்கிறார்.

---

## மீண்டும் கட்சித் தலைவர்களாக தெரிவு

புதுடில்லி, மார்ச் 6

மகாராஷ்டிரா, ராஜஸ்தான், குஜராத் ஆகிய ராஜ்யங்களின் முதன் மந்திரிகள் மீண்டும் கட்சித்தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## ஐயாறன் எழுதுவது

சீதனக் கொடுமை காரணமாக 7 பிள்ளைகளின் தாயார், வட்டுக்கோட்டையிலே தற்கொலை செய்து கொண்டதாக வெளியான செய்தியைப் படித்துவிட்டு மிகவும் மனவேதனைப்பட்டேன்.

அத்தாய்க்கு 7 பிள்ளைகளாம். அதில் 6 பேர் பெண்கள். மூத்தவருக்கு விவாகமாகியிருந்தது. ஆனால் அவரது சீதனம் இன்னும் கொடுபடவில்லையாம். இதனால் அத்தாய் அதிக கவலை அடைந்ததாயும், 6 மாதங்களுக்கு முன் ஒரு பெண் குழந்தையைப் பெறவே, அவருக்குக் கவலை அதிகமாகிவிட்டதாயும் சொல்லப்படுகிறது. இந்த மாதிரி பெண்களைப் பெற்றுத் தவிக்கும் பெற்றோர்கள் எவ்வளவோ!

* * *

பெண்தான் வீட்டுக்கும், சமூகத்துக்கும் அழகு கொடுப்பவர். அப்படிப்பட்ட அருமையான செல்வத்தைப் பெற்றவர்கள் சீதனக் கொடுமை காரணமாக தற்கொலையும் செய்ய நேரிடுவதென்றால் அது எவ்வளவு பெரிய கண்றாவி.

பெண்ணைப்பெற்று பலவருட காலம் அருமையாக வளர்த்து ஒருவருக்கு விவாகம் செய்து கொடுத்த பெற்றோர்கள், சொன்னபடி சீதனம் கொடுக்க முடியவில்லை என்ற காரணமாக, மனைவியை தாய் வீட்டுக்கே அனுப்ப முடியாதென்று ஒரு மாப்பிள்ளை தடைபோட்டு விட்டாராம். அந்த மாப்பிள்ளைக்கு இதுவரை 3 பெண் குழந்தைகள்! இன்னும் எவ்வளவோ! கசக்கிக் கசக்கி சீதனம் வாங்கும் மாப்பிள்ளைகளே உஷார்!

* * *

இந்தியாவிலே சீதனம்கூடாதென்று சட்டமும் நிறைவேற்றிவிட்டார்கள். அந்த மாதிரி ஒரு சட்டத்தை இங்கு நிறைவேற்றினால் இந்தக் கொடுமை ஓரளவு குறையலாம்.

சீதனக் கொடுமைக்கு இதுவரை பல பெண்கள் பலியாகியுள்ளனர். இப்போது ஒரு தாயே தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். இதன் பிறகாவது இங்கு சீதனக் கொடுமையை ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். படித்த பெண்கள் முன் வந்து கட்டுப்பாடாகக்கிளர்ச்சி செய்தால், இந்தக்கொடுமை வெகுவாகக்குறையக்கூடும். பெண்களை அவமதித்துகொடுமைக்கு உள்ளாக்கும் இப்பழக்கத்தை சக்தி வடிவங்களான பெண்கள்தான் எதிர்த்துப்போராட வேண்டும். மகாத்மாகாந்தியும் அப்படித்தான் சொன்னார்.

* * *

"பத்திரிகைக்காரர் குடிக்கப்படாது. ஏனெனில் குடிக்கும் பத்திரிகைக்காரரை சற்றும் நம்பவே முடியாது" என்று புதுடில்லியிலே 'யூனெஸ்கோ' ஆதரவில் நடைபெற்ற தகவல் மகாநாட்டில் மலாயாவிலிருந்து வந்திருந்த பிரதிநிதி ஹாஷிம் பின் ஹஸான் என்பவர் சொன்னார். அரசாங்கத்திலோ அல்லது ரேடியோ மலாயாவிலோ சேவை செய்ய விரும்பும் பத்திரிகைக்காரர் குடிக்கவோ சூதாடவோ கூடாதென்று தாம் சர்விஸ் கமிஷனுக்கு ஒரு யோசனை கூறியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையிலே குடிக்காத பத்திரிகைக்காரர் யாரும்

(8-ம் பக்கம் பார்க்க

# 3 வருடங்களில் தமிழ் நிர்வாக மொழியாகும்

## தமிழ்நாட்டு நிதிமந்திரி சுப்பிரமணியம் கருத்து

சென்னை, மார்ச் 6

தமிழ்நாடு அரசாங்கத்தின் மத்திய அலுவலகங்களில் (செகரடேரியட் உட்பட) தமிழ்நிர்வாக மொழியாக இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் ஆகிவிடும் என்று தமிழ்நாடு நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் தமிழ்நூல் வெளியீட்டுக்கான அரசாங்க நிறுவனத்தை பாலர் அரங்கில் துவக்கி வைத்துப் பேசுகையில் கூறினார்.

"தமிழ்நாடு முதன்மந்திரி ஸ்ரீ கே. காமராஜ் இவ்விழாவிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது:

தமிழில் நல்ல முறையில் சிறந்த புத்தகம் வெளியிட தமிழ்மொழி வெளியீட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

கல்லூரிகளில் தமிழில் கற்றுக் கொடுக்கப்போதுமான புத்தகங்கள் இல்லாத குறை இதனால் நீங்கும். தமிழில்புதிய கருத்துக்களைக் கொண்ட நூல்களும் சொந்தமாக சிந்தனை ஆற்றல் படைத்தவர்களின் நூல்களும் தமிழில் வெளியிடவும் இக்கழகம் உதவும்"

நிதிமந்திரி பேசுகையில் கூறியதாவது: "அன்னிய மொழி அறியாத, தமிழில் ஆற்றல் படைத்தவர்கள் விஞ்ஞானம் போன்றவைகளில் பல அரிய நவீன கருத்துகளை அறிந்து அதை பயன்படச் செய்யவும் இந்தத் தமிழ்நூல் வெளியீட்டு கழகம் பெரிதும் பயன்தரும்.

பாட புத்தகங்களை அரசாங்கம் வெளியிடுவதா அல்லது தனியார் துறை வெளியிடுவதா என்ற சர்ச்சை உள்ளது. தனியார் துறைபோன்ற மற்ற வெளியீட்டுக்காரர்களும் நல்ல நூல்களை வெளியிட முன்வந்தால் இந்த கழகம் அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து ஆதரவளிக்கும்.

எல்லா துறைகளிலும் படிப்படியாக தமிழ்மொழி உபயோகப்படுத்தப்பட்டு செயலாற்றப்படுகிறது. படிப்படியாக செய்வதின் மூலம்தான் தமிழ்வளர முடியும். சட்டமியற்றுவதினால் லாபம் இல்லை. சில சிக்கல்தான் தோன்றும்.

மாவட்ட ரீதியில் மாவட்ட அலுவலகங்களில் தமிழ்மொழி பயன்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு இலாகா தலைமை அலுவலகத்திலும் மாநில அரசின் மத்திய அலுவலகத்திலும் தமிழ் நிர்வாக மொழியாக இரண்டு மூன்று ஆண்டுகளில் வந்துவிடும்.

பள்ளிகளில் தமிழ், கல்லூரிகளில் அன்னிய மொழி என்பதால் மாணவர்களுக்கு கஷ்டமும் திகைப்பும் ஏற்படுகிறது.

பள்ளியிலிருந்து கல்லூரிக்கு சென்றதும் அங்கு புரியாத மொழி கற்றுக் கொடுக்கப்படுகிறது. 'சிலர் கல்வியின் தரம் குறைந்துவிட்டது என்கிறார்கள். இதற்கு அடிப்படையான காரணம் இந்த புரியாத மொழிதான். புரியாத மொழியினால் மாணவர்களின் கவனமும் வேறு பக்கம் திரும்பிவிடுகிறது.

தமிழ்மொழி வளர்ச்சிக்காக 10 லட்சம் ஒதுக்கட்பட்டுள்ளது. நிதி இல்லை என்ற காரணத்தால் தமிழின் வளர்ச்சி தடைபட்டுவிடக்கூடாது. இதற்காகாக போதுமான நிதி தமிழ்நாடு அரசாங்கம் ஒதுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

வருங்கால சந்ததிகளான குழந்தைகள் அறிவும் திறமையும் பெறுவதற்காக, ஆராய்ச்சி செஞது இந்த தமிழ் நூல் வெளியீட்டுகழகத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

கோவை அரசினர் கல்லூரியில் தமிழ் போதனமுறையாக 2 ஆண்டுகளாக உள்ளது. இதைப் பற்றி அறிய நியமிக்கப்பட்ட ஆராய்ச்சிக் குழு அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறது

தமிழ் போதனமுறையினால் ஆங்கில அறிவு எந்த விதத்திலும் குறையவில்லை. பிறபாடங்களின் தரமும் குறையவில்லை அறிவுதான் நன்கு வளர்ந்திருக்கிறது என்று அந்த குழு கூறியுள்ளது. இன்னும் கூறப்போனால் மாணவர்கள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை தைரியமாக நிவர்த்தி செய்து கொள்கிறார்கள். கல்வி போதிப்பதில் முன்பு இருந்தது போல் பளுவாக இல்லாமல் இன்பமாக உள்ளது என்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

நாடு ஒற்றுமையாக இருக்க வேண்டும். இதற்கு ஒருபொது மொழி மிக அவசியம்.

கல்வி திட்டத்தில் அரசியல் பிரச்சினைகளை குத்தாமல் இருந்தால் கல்வியின் தரம் வளரும். மற்ற எல்லா துறைகளிலும் தமிழ்நாடு இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருப்பது போல இந்த கழகமும் சிறந்த முறையில் செயலாற்றும் என நம்புகிறேன்.

---

## பிராங்க்பர்ட் உயிர்காட்சிசாலையில்

### பட்சிகளுக்கு கண்ணாடி 'ஹால்'

பிராங்க்பர்ட், மார்ச் 6

டாக்டர் பேர்ன்ஹார்ட் க்ரிஸிமெக், பிராணிகள், பட்சிகள் இவைகள் குறித்து ஏராளத் தகவல்களைச் சேகரித்திருப்பதுடன் அவைகளைப் பற்றி புத்தகங்கள், கட்டுரைகள், சினிமாப்படங்கள் இவைகளைத் தயாரித்தும் இருக்கிறார்.

ஆப்பிரிக்காவிற்குச் சென்ற இவர் தயாரித்த பிராணி சம்பந்தமான ஒரு சினிமாப்படத்திற்காக இவருக்கு "ஆஸ்கர்" பரிசு ஒன்றும் கிடைத்தது.

ஆபிரிக்காவில் இவர் தன் அனுபவங்களை விவரித்து எழுதியுள்ள புத்தகம் பல மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன. இவர் பிராங்க்பர்ட் உயிர்க் காட்சி சாலையை மிக அற்புதமான முறையில் விஸ்தரிக்கச் செய்திருக்கிறார். 1945ல் இவரிடம் இக்காட்சி சாலை ஒப்படைக்கப்பட்ட போது வெறும் பாலைவனம் போல காட்சியளித்தது. அப்போது 15 பிராணிகள் தான் இருந்தன. ஆனால் இன்று 700க்கு மேற்பட்ட பிராணி, பட்சி வகைகள் அதில் உள்ளன. ஜெர்மனியில் அல்லது ஐரோப்பாவில் மிக அரிதான சில பிராணிகளைக் கூட இங்கே காண முடியும்.

பட்சிகள் வசிப்பதற்காக வென்றே மாபெரும் கண்ணாடி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. பட்சிகளுக்கும் தாங்கள் கூண்டுக்குள் இருப்பதாக எண்ணம் எழுவதில்லை. பார்ப்பவர்களுக்கும் கூண்டுக்குள் இருப்பதைப் பார்ப்பதாகத் தோன்றுவதில்லை. இதற்குள் பலதரப்பட்ட பட்சிகள் கூடிக்குலாவி ஆனந்தமாக வாழ்கின்றன. இம்மாதிரி பட்சிகளுக்கான நிலையம் வேறு எந்த உயிர்க் காட்சி சாலையிலும் ஏற்படுத்தப்படவில்லை.

சில வாரங்களுக்கு முன் மற்றொரு நூதன முறை இக்காட்சி சாலையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பிராணிகளைப் பார்க்கும் போது அவைகளைப் பற்றிய விவரங்கள் எல்லாம் சொல்லப்படுவது 'மைக்' மூலம் கேட்கிறது. இம்மாதிரி விளக்கம் கூறுபவர் பெர்ன்ஹார்ட் க்ரிஸி - மெக்தான். இதற்கான வசதிகளை ஜெர்மன் அரசாங்கத்தின் போக்குவரத்து சாதனத்துறை இந்த உயிர்க்காட்சிசாலைக்கு அமைத்துக் கொடுத்துள்ளது. பிராங்க்பர்ட் உயிர்க் காட்சி சாலை இவருக்கு பெரும் புகழை அளித்துள்ளது.

---

## தென்னிந்திய காடுகளுக்கு ஜெர்மன் கருங்காலி மரம்

ஸ்டட்கார்ட், மார்ச் 6

ஜெர்மானியர்களின் நட்பின் அறிகுறியாக பர்க்கென் பெல்ட் காடுகளிலிருந்து கருங்காலி மரங்களின் கிளைகள் தென்னிந்திய காடுகளில் வளரச் செய்ய விமான மூலம் அனுப்பப்படுகின்றன. இந்த மரக்கிளை கரீம் நகர் குழந்தைகளுக்கு பரிசாக அனுப்பப்பட்டவை. இதன் காரணமாககரீம்நகர்குழந்தைகள்பற்றி மேற்கு ஜெர்மானியர் அறியவும் பர்க்கென் பெல்ட் பற்றி கரீம் நகர் குழந்தைகள் அறியவும் வாய்ப்பு ஏற்பட்டது.

யுத்தக் கொடுமைகளை அனுபவித்த ஜெர்மன் சீமாட்டிஎலிஸபெத் ஜெட்லர் என்பவருக்கு இந்தியாவிலிருந்து அவருடைய சிநேகிதியிடமிருந்து கரீம் நகர் குழந்தைகள் ஆஸ்பத்திரி நிதி வசதி இல்லாமல் படும் கஷ்டம் தெரிய வந்தது. ஸ்ரீமதி ஜெட்லர் உடனே நிதிதிரட்ட பெரு முயற்சி எடுத்துக்கொண்டார். வெகு சீக்கிரத்தில் 10634-71 ஜெர்மன் மார்க்குகளை இவர் சேகரித்து அனுப்பிவைத்தார். இதில் 2,000 மார்க்குகள் பிரிக்கப்பட்ட பெர்லினிலித்து வந்ததாகும்.

இந்த நிதியைக் கொண்டு ஒரு தனிவார்டு கட்டப்படவிருக்கிறது. மேலும் நான்கு படுக்கைகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. கருங்காலி மரக்கிளை இந்திய ஜெர்மன் நட்பின் சின்னமாக விளங்கி வருகிறது.

---

## பறக்கும் விவசாயிகள்

லண்டன், மார்ச் 6

பிரிட்டனில் வேளாண்மைத் துறையில் ஆகாய விமானத்தின் உபயோகம் அதிகரித்து வருகிறது. ரசாயன எரு இடவும், பூச்சிகளை அழிக்கும் மருந்து தெளிக்கவும், வேறு பல பணிகளுக்கும் பிரிட்டிஷ் விவசாயிகள் சிறிய ரக ஆகாய விமானங்களை உபயோகிக்கிறார்கள்.

பிரிட்டிஷ் விவசாயிகள் தான் உலகத்திலேயே பெருமளவில் இயந்திர சாதனங்களை உபயோகிக்கிறார்கள்.

---

# யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் மீது கண்டனம்

## தலைமைப் பதவிக்காக பிறரைப் பயன்படுத்துகிறாராம்

சென்னை மார்ச் 6

"இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் ஜனப். முகம்மது இஸ்மாயில் சாஹிப், அனுஷ்டித்துவரும் தற்கொலைக் கொள்கையை முஸ்லிம்கள்-குறிப்பாக தமிழ் நாட்டிலும் கேரளத்திலும் உள்ள முஸ்லிம் சமூக இளைஞர்கள்-சிந்தித்துப் பார்க்க வேண்டும்" என்று அகில இந்திய முஸ்லிம் லீக்கின் தமிழ்நாடு கமிட்டித் தலைவர் ஜனப். எம். எஸ். ஏ. மஜீத் ஓர் அறிக்கையில் கேட்டுக்கொள்கிறார்.

"தம்முடைய தலைமைக்காக ஏழை அப்பாவி முஸ்லிம்களையும் இந்தியப் பிரஜைகள் என்ற முறையில் அவர்களுக்குரிய ஜீவாதார நலன்களையும் ஜனப். இஸ்மாயில் சாஹிப் பலியிடுகிறார்" என்றும் அறிக்கை கூறுகிறது.

"ஜனப். இஸ்மாயில் சாஹிப் நிறுத்திய முஸ்லிம் லீக் அபேட்சகர்கள் தேர்தலில் முறியடிக்கப்பட்டதும், அவர்களில் சிலர் ஜாமீன் தொகையை இழந்ததும், தமிழ் நாட்டு முஸ்லிம்களுக்கு அவரிடமும் அவர் "தலைமை"யின் கீழ் உள்ள ஸ்தானத்திடமும் நம்பிக்கை இல்லையென்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. கேரள ராஜ்யத்தின் மஞ்சேரி தொகுதியில் ஜனப். இஸ்மாயில் சாஹிப் வெற்றி பெற்றாலும் அது அவருக்குப் பெருமை தருவதாக இல்லை. ஏனென்றால் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அபேட்சகர்கள் வாங்கிய மொத்த வோட்டுக்கள் அவருக்குக் கிடைத்த வோட்டுக்களைப்போல கிட்டத்தட்ட இரண்டு மடங்காகும். எனவே முஸ்லிம்கள் அதிகமாக வாழும் ஒரு பகுதியில் பெரும்பாலோர் அவருடைய தலைமையையோ கொள்கையையோ ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது" என்று ஜனப் மஜீத் கூறுகிறார்.

ஒவ்வொரு பொதுத் தேர்தலின் போதும் ஜனப். இஸ்மாயில் சாஹிப் ஒரு தற்கொலை-அழிவுக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்திருக்கிறார் என்றும் காங்கிரஸை எதிர்க்கும் ஒரே நோக்கத்துடன் 1952, 1957 தேர்தல்களில் சுயேச்சை அபேட்சகர்களை ஆதரித்தார் என்றும் ஆனால் தமிழ் நாட்டு முஸ்லிம் சமூகத்துக்கு அதனால் யாதொரு நன்மையும் விளையவில்லையென்றும் ஜனப் மஜீத் எடுத்துக் காட்டுகிறார்.

இந்தத் தேர்தலில் தி. மு. க. வுடன் ஜனப் இஸ்மாயில் சாஹிப் உறவு கொண்டாடியது பற்றி ஜனப் மஜீத்தின் அறிக்கை கூறுவதாவது:-

"தி. மு. க. வின் லட்சியம் இந்தியாவில் ஒரு தனி ராஜ்யம் அமைப்பதாகும். தி. மு. க. தலைவர் சாமர்த்தியமாக இவருடன் கூட்டு வைத்துக் கொண்டு தம் அபேட்சகர்களுக்குச் சகல நன்மையும் தேடிக் கொண்டார் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் ஜனப் இஸ்மாயில் சாஹிப் நிறுத்திய லீக் அபேட்சகர்களுக்கு தி. மு. க. விடமிருந்து பதிலுக்கு ஆதரவு எதுவும் கிடைக்கவில்லை. காங்கிரஸை ஒழிக்க வேண்டுமென்ற ஆத்திரத்தில் "சுதந்திரா", "நாம் தமிழர்"போன்ற கட்சிகளுக்கு, சுயேச்சையாளர்களுக்கு சில பகுதிகளில் அவர் தமது லீக்கின் ஆதரவை அளித்தார். ஆனால் தமிழ்நாட்டு முஸலிம்களுக்கு ஜனப் இஸ்மாயில் சாஹிப் ஏதாவது நன்மை செய்திருக்கிறாரா என்றால், நிச்சயமாக இல்லை. அதற்குப் பதிலாக, அவர் தமது கொள்கையால் முஸ்லிம்களின் நலன்களுக்குப் பெரும் பாதகமே செய்திருக்கிறார். அவர் என்னென்ன முயற்சிகள் செய்தபோதிலும் காங்கிரஸ கட்சி வெற்றி பெற்றுவிட்டது. ஸ்திரமான அரசாங்கத்தை தமிழ் நாட்டில் அமைக்கப் போகிறது."

---

## கேரள காங்கிரஸ் சரிவுக்கு காரணம்

திருவனந்தபுரம், மார்ச் 6

"1960-ம் வருடம், முஸலிம் லீக்குடன் உடன்பாடு செய்து கொண்டதின் மூலம் மாபெரும் தவறு செய்துவிட்டதாலேயே, கேரளக் காங்கிரஸ இந்தப் பொதுத் தேர்தலில் (லோக சபை) மிகமோசமாக நஷ்டமடைந்தது." என்று கேரள பிரதேச காங்கிரஸ தலைவர் ஸ்ரீ சி. கே. கோவிந்தன்நாயர் கூறினார்.

"முஸலிம்லீகிற்குஇந்தஅளவு முக்கியத்துவம் அளித்திருக்கக்கூடாது" என்றார்.

"1960 இடைக்காலத் தேர்தலுக்குப் பிறகு அதிகாரத்திலிருந்ததால் ஏற்படக்கூடிய நலன்களை வைத்துக்கொண்டு முஸ்லிம்லீக் அதிகமாக வளர்ந்துவிட்டது" என்று அவர் மேலும் கூறினர்.

முஸலிம் லீகிற்கு இந்த வசதிகள் கிடைக்க விட்டிருக்கக்கூடாது என்று கூறிய அவர், "காங்கிரஸ தோல்வியுற்றது. ஆனால் அதை சமாளித்தாக வேண்டும்" என்றார்.

---

## ரஷ்ய பிரயாணி விமானங்கள்

மாஸ்கோ, மார்ச் 6

இன்னும் சுமார் 8 ஆண்டுகளுக்குள் அதாவது 1970க்குள் சோவியத் ஜெட் பிரயாணி விமானங்களின் வேகம் மணிக்கு 1250 மைலாக உயர்ந்துவிடும். இது, ஒலியின் வேகத்தைவிட மிகவும் அதிகமாகும்.

1980-ல் சோவியத் பிரயாணி விமானங்கள் மணிக்கு 3000 கிலோமீட்டர் வேகத்தில் பிரயாணம் செய்யும். ஒவ்வொரு நாளும் சோவியத் விமானங்களில் ஒரு லட்சம் மக்கள் பிரயாணம் செய்வார்.

---

# 'ஐம்புலன்களை அடக்கி சிவனை தியானிப்பதே சிவராத்திரி

## 'சைவப்புலவர்' பேச்சு

யாழ்ப்பாணம், செவ்வாய்

மகாசிவராத்திரியை முன்னிட்டு வண்ணார்பண்ணை ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனையும் நான்கு சாமப் பூசைகளும் நடைபெற்றன.

ஞாயிற்றுக்கிழமை மாலை சிவராத்திரி புராணம் படித்த போது தமிழ்ப் பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேஸ்வர ஐயர் புராணத்துக்கு விரிவுரை கூறினார். அதன்பின் ஆசிரியர் திரு. கு. முருகேசு "மகா சிவராத்திரியின் மகிமை"பற்றியும், பண்டிதர் ஜெகந்நாதன் "திருவாசகம்" என்னும் பொருள் பற்றியும், செல்வன் இ. மயூரநாதன் "கண்ணப்ப நாயனாரின் சரித்திரம்"பற்றியும் முறையே சொற்பொழிவாற்றினார்கள்.

நித்திரை விழிப்பது தான் சிவராத்திரி என்ற கொள்கை பலரிடத்தில் இருக்கின்றது. இதன் காரணமாகப் படமாளிகைக்குச் சென்று பொழுது போக்குகின்றனர் பலர். ஆனால் உணவை நீக்கி, ஐம்புலன்களை அடக்கி சிவனைத் தியானம் செய்யும் காலமே சிவராத்திரியாகும். அன்று ஆலய வழிபாடு மிகச் சிறந்ததேயாகும். வேறு தீய வழியிற் சென்று நித்திரை விழிப்பதினால் சிவராத்திரியின் பலனை அடைய முடியாது என நான்கு சாமப் பூசைகளின் பலாபலன்களைப் பற்றி எடுத்துக் கூறிய சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி கூறினார்.

பின் தி. ச. தியாகராசா பக்திப் பாடல்கள் பாடினர்.

# மங்கையர் உலகம்



## மணவாழ்க்கையின் வெற்றிக்கு இந்தியா காட்டும் வழி

"புனித முறையொன்றைத் தழுவியிருப்பதால் இந்திய மக்களின் மணவாழ்க்கை வெற்றிகரமாக நடைபெறுகின்றது. இதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது."

இந்திய திருமண முறைகள்பற்றி இந்தியப் பெண்மணி ஒருவருடன் சம்பாஷித்து முடிந்ததும் ஆங்கிலப் பெண்மணி ஒருவர் மேற்கண்டவாறு கூறினார். தமிழ் நாட்டுப் பெண்ணுக்கும் மேலை நாட்டுப் பெண்ணுக்குமிடையே நடைபெற்ற சம்பாஷணையைப் படித்துப்பாருங்கள்.

இந்தியாவில் உள்ள சிறிய நகரமொன்றின் வீதியில் பெருந்திரளான மக்கள் கூடி நின்றார்கள். வீணா என்னும் ஒரு குடும்பப் பெண்ணும் தனது வீட்டு வாயில் படியில் நின்றபடி தெரு வீதியைப் பார்த்து நின்றாள். கலியாண ஊர்வலம் ஒன்று வீதியில் வந்துகொண்டிருந்தது. கலியாணம் என்றால் பல தடவைகள் பார்த்தவர்களுக்கே வேடிக்கை. ஆனால் அந்த வீதி வழியே ஊர் பார்த்து நின்ற 'றுத்' என்னும் ஆங்கில நாட்டுப் பெண்ணுக்கு ஊர்வலம் அதிக ஆர்வத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியது. வாசல் படியில் நின்ற வீணாவிடம் விபரம் கேட்க ஆரம்பித்தாள். வீணாவும் அவரது கேள்விக்குப் பதிலளித்தாள்.

தமிழ் நாட்டுத் திருமணம் ஆங்கில மகளுக்கு எத்தனை வியப்பளிக்கிறது என்பதை இருவருக்குமிடையே நடந்த சம்பாஷணையைப் படித்து அறிந்துகொள்ளுங்கள்.

றுத்: மாப்பிள்ளையை மலர் மாலைகளினால் மூடி மறைத்து விட்டார்களே! மாப்பிள்ளையை ஒரு தடவையேனும் பெண்பிள்ளை பார்க்கவில்லை என்று நீர் கூறியது உண்மைதானா?

வீணா: ஆமாம்! நான் சொன்னது முற்றிலும் உண்மை. ஆனால் இது உங்களுக்கு ரொம்ப அபூர்வமாகத்தான் இருக்கும். இந்தியாவில் உள்ள எமக்கு இது ரொம்பப் பழகிப் போய்விட்டது. ஊர்வலத்து மேள தாள வாத்தியம் உங்களுக்குப் பிடித்ததா?

றுத்: ஆம் அது மிகவும் ஜோராய் இருக்கிறது. ஆனால் எனக்கு மணப் பெண்ணை நினைக்க மிகவும் வேடிக்கையாகவும் பரிதாபமாகவும் இருக்கிறது. ஒரு நாளும் காணாத புருஷனை மணக்கும் மணப் பெண்ணின் மனம் எப்படி இருக்குமோ? அதை நினைக்கவே எனக்குப் பயமாக இருக்கிறது.

வீணா: நீங்கள் சொல்லுவது சரிதான். பெற்றோர்கள் தேடித் தரும் மணவாளருடனே வாழ்க்கை நடாத்துவதற்கு ஏற்ற வகையில் எமது கன்னி வாழ்க்கையைத் தயார் செய்துகொள்வோம். உண்மையை உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன். எனது பெற்றோர்கள் என்னிலும் பார்க்க அனுபவமுடையவர்களாகையால் என்னிலும் பார்க்க அவர்களே நல்ல புருஷனைத் தேடித்தருவார்கள் என்பது என்னுடைய நம்பிக்கை. எனக்கு எது நல்லதோ அதையே பெற்றோர்கள் செய்வார்கள். விவாகத்தின் பின்னர் பெற்றோருக்கு உள்ள உரிமை இழந்துபோகும் என்பதுதான் மணப்பெண்ணுக்கு ஏற்படும் ஒரேயொரு கவலை. விவாகத்தின் பின்னர் கணவரின் குடும்பத்தினரை மகிழ்விக்க மனைவி கற்றுக்கொள்ளவேண்டும். நல்ல கணவனை பெற்றோர்கள் தேடிவிட்டார்கள் என்னும் நம்பிக்கை மணப்பெண்ணுக்கு உண்டு. மாப்பிள்ளையின் 'போட்டோ' ஒன்றை மணப்பெண்ணுக்குக் காட்டியிருப்பார்கள். திருமணம் ஒழுங்கு செய்யப்பட்ட நாள் முதலாக மணவாளனைப் பற்றியே அவள் சிந்தித்திருப்பாள்.

றுத்: என்னால் எல்லாவற்றையும் கற்பனை செய்யமுடிகிறது. பைபிளில் கூறப்பட்டுள்ள 'ஐஸாக்' திருமணம் இங்கு எனக்கு நினைவுக்கு வருகிறது. அவருடைய தந்தை 'ஆபிரஹாம்' அவர்களே 'ஐஸாக்' கின் திருமணத்துக்கு ஒழுங்கு செய்தார். திருமணத்துக்குப் பின்னர் தான் 'ஐஸாக' மனைவி ரெபேக்கா மீது காதல் கொண்டாராம்.

வீணா: எங்களுடைய பழக்கமும் அதுதான். திருமணத்தின் பின்னர்தான் காதல் பிறக்கிறது. காலம் செல்லச் செல்லக் காதலும் வளர்கிறது. கணவரின் குணம் பற்றியும், கணவரிடம் தான் எவ்வாறு நடந்துகொள்வாள் என்பது பற்றியும், தன்னை எவ்வாறு அலங்கரித்துக் காண்பிப்பாள் என்பது பற்றியும் பெண் கன்னியாக இருக்கும்போது கனவுகள் காண்பாள். கணவருக்குத் தான் செய்யவிருக்கும் உணவுகள் சிற்றுண்டிகள் பணிவிடைகள்பற்றிக் கனவு காண்பாள். எத்தனையோ எண்ணங்கள் அவள் மனதில் குடிகொள்ளும்.

றுத்: வீணா, கலியாணத்துக்கு முன்னர் அவள் மாப்பிள்ளையைப் பார்க்கவே மாட்டாளா?

வீணா: பெண்ணின் வீட்டாருடனும் உறவினருடனும் தான மாப்பிள்ளை முதலில் பழகுவார். மணப்பெண்ணை அவளது நண்பிகளும் ஏனைய பெண்களும் அலங்காரஞ் செய்வார்கள். பெற்றோருடன் செய்யவேண்டிய கிரியைகள் முடிந்ததும் மாப்பிள்ளைக்கு அருகில் அமர்த்துவார்கள். இந்தச் சமயத்தில் மாப்பிள்ளை பெண்பிள்ளை மலர்மாலை மாற்றிக்கொள்வார்கள். மணப்பெண்ணின் சகோதரி அல்லது அவருக்கு அதிக உறவான பெண் மணப்பெண்ணின் முக்காட்டுக்கு மாப்பிள்ளையின் சால்வைக்கும் சேர்த்து முடிச்சுப் போட்டுவிடுவாள். இந்தச் சமயத்தில்கூட மணப்பெண் மாப்பிள்ளையைப் பார்த்திருக்கமாட்டாள். குனிந்தபடியே முக்காட்டுடன் இருப்பாள். கண்ணோரமாக ஒரு சமயம் மாப்பிள்ளையைப் பார்த்தால் சரி. இல்லாவிட்டால் கொஞ்சமுமே காணமாட்டாள். மாப்பிள்ளைக்கும் முக்காடு போட்டுவைக்கும் வழக்கம் சில இந்தியரிடம் உண்டு. இந்தியாவில் பல ஜாதி மக்கள் இருக்கிறார்கள். ஒருவருடைய பழக்கம் இன்னுமொருவருக்குப் பிழையாகவும் தோன்றலாம். முஸ்லிம்களைப் பொறுத்தவரை கலியாண வைபவத்தின்போது மணப் பெண்ணும் மாப்பிள்ளையும் வெவ்வேறு அறையிலேயே இருப்பார்கள். சமய குருக்கள் மூலமாகச் சத்தியம் செய்துகொள்ளுவார்கள்.

றுத்: மேலைத் தேசத்தில் மணப்பெண் வெள்ளை உடை அணிந்துகொள்வாள். உங்களுடைய நாட்டில் எவ்வாறு உடையணிந்துகொள்வார்கள்?

வீணா: 'குஜராத்' மணப் பெண்கள் வெள்ளை உடை அணிவார்கள். ஆனால் நாங்கள் சிவப்பு நிற ஆடையைத் தான் அதிகமாக அணிவோம். இந்திய மணப் பெண்கள் பெருமளவில் நகைகளை அணிந்துகொள்வார்கள் அத்தோடு சிவப்பு முக்காடும் அணிந்துகொள்வார்கள். கைகள், பாதங்களில வர்ணப் பூசிக்கொள்வார்கள். நெற்றிக்கு சந்தனப் பொட்டிட்டு அலங்காரம் செய்துகொள்வார்கள். சில நாட்களுக்கு முன்னரே மணப் பெண்ணின் அலங்கார ஆயத்தங்கள் செய்யப்படும். மஞ்சளும் வாசனைத் திரவியங்களும் உடலில் உதவி மணப்பெண்ணுக்கு நீராட்டுவர். அந்தத் திரவியங்களில் ஒரு பகுதியை மாப்பிள்ளைக்கும் அனுப்பி வைப்பார்கள். வாசனைத் திரவியங்கள் விலை அதிகமாகையால் உறவினரும் பணம் உதவி அவற்றை வாங்கிக் கொடுப்பார்கள். திருமணத்தின் ஆயத்தங்கள் எல்லாம் தம்பதிகளின் ஜாதகத்தைப் பார்த்துவிட்டே செய்யப்படும். ஜாதகத்தில் குறிப்பிட்ட நல்லநாள் வரும்வரை மணமான பின்பும் சில தம்பதிகள் ஒரே அறையில் இருப்பதில்லை.

றுத்: வீணா, எங்கள் நாட்டிலும் சில அபூர்வமான நம்பிக்கைகள் இருக்கின்றன. மணப்பெண் பழைய இரவல் வாங்கிய நீல உடை ஒன்றை அணிந்து கொள்ள வேண்டும். உங்கள் நாட்டிலும் அப்படியான நம்பிக்கை எதுவும் இருக்கிறதா?

வீணா: ஆமாம், எங்களிடையேயும் பல தினுசான நம்பிக்கைகள் இருக்கின்றன. மணப்பெண்ணின முக்காட்டில் தானியம், வெற்றிலை, பாக்கு, சங்கு போன்ற பலவகைப் பொருள்களை முடிந்துவிடுவார்கள். இவை அதிர்ஷ்டத்தையும் நல்ல வாழ்க்கையையும் கொண்டுவரும் என்பது எமது நம்பிக்கை. ஒவ்வொரு மாகாணத்தில் ஒவ்வொரு வகையான பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் இருந்து வருகின்றன. ஆனால் வேத நூல் அடிப்படையில் திருமணக் கிரியைகள் செய்யப்பட்டு வருகின்றன. நீங்கள் அணிவது போல நாம் திருமண மோதிரம் அணிவதில்லை. சில மாகாணத்து மணப் பெண்கள் கால் விரல்களிலும் மோதிரம் அணிந்து கொள்வர். காஷ்மீர் மணப்பெண்கள் ஒரு விசேஷமான காதணியை அணிவார்கள். சிலர் இருப்புக் காப்புகளை அணிவார்கள். சிலர் கல்லுப் பதித்த பொற்காப்புகளையும் தங்க செல்லர்களையும் அணிவர். நேபாள நாட்டினர் பல பட்டுக்களுள்ள [illegible] மணிமாலையை விசேஷ அணியாக அணிவார்கள் சிலர் கருமணியும் பொன்மணியும்சேர்த்துக் கோர்க்கப்பட்ட மாலைகளை அணிவார்கள். எந்த வழக்கத்தையும் மணமான ஒரு பெண்ணுக்குச் சொல்லலாம்.

றுத்: திருமணம் ஒழுங்கு செய்யப்பட்ட பிறகு அதை ஒரு சாரார் வாபஸ் செய்து குழப்பிவிட முடியுமா?

வீணா: இல்லை, இல்லை. அப்படிச் செய்துவிட முடியாது. ஒழுங்குசெய்யப்பட்ட திருமணத்தைக் குழப்பிவிட்டால் குழப்பியடித்த அந்தக் குடும்பத்துக்குச் சமுதாயத்தில் பெரிய இழுக்கு ஏற்பட்டுவிடும். சிறுபிராயத்திலேயே செய்துகொண்ட சத்தியத்தை முறியடிக்கக் கூடாது. இந்திய திருமணத்தில் சீதனமுறை கையாளப்பட்டுவருகிறது. சீதன வழக்கத்திலை காணியும் பணமும் மட்டுமன்றி நகைகளும் வழங்கப்படுகிறது. சிலசமயம் மாப்பிள்ளைக்குத் தேவையான உடைகளும் அவரது குடும்பத்தினருக்குத் தேவையான பொருள்களும்கூட வழங்கப்படுகிறது. சில சமயங்களில் மாப்பிள்ளை படிப்பதற்குப் பணம் உதவுவதாகக் கூடப் பெண்களின் பெற்றோர் வாக்களிப்பர்.

றுத்: பெற்றோர்களே மகளின விவாகத்துக்கு ஒழுங்கு செய்வதாக இருந்தால் பெண்கள் [illegible]த்துக்கே கணவரை அடைந்துவிட இடமுண்டு. அப்படியல்லவா?

வீணா: அப்படியாக உங்களுக்குத் தோற்றலாம். ஆனால் பெண் அழகில் மட்டமாக இருந்தாலும் அங்கம் குறைந்தவளாக இருந்துவிட்டாலும் பெரிய கஷ்டம்தான்!

சங்கீதம், நாட்டியம், படிப்பு ஆகியவற்றில் பெண்களிடையே காணப்படும் தேர்ச்சி விவாகத் தகுதிகளாகவும் தர தரங்களாகவும் கொள்ளப்படுகின்றன. புதினப் பத்திரிகைகளில் விவாக விளம்பரங்களைத் தினமும் காணலாம்.

"25 வயதான, 5 அடி 3 அங். உயரமுள்ள பெருங்குடும்பத்தைச் சேர்ந்த சீக்கிய இளைஞனுக்கு அழகிய மணப்பெண் தேவை. மாப்பிள்ளை வருடாந்தம் 100,000 வருமானம் பெறுபவர். பெண்ணின் திறமைகளே முக்கியம். வறுமை, சீதனமின்மை பாதகமில்லை."

"எம் ஏ. படித்துள்ள இளம் பெண் விவாகம் செய்யவிருக்கிறார் தகுதியுள்ள பஞ்சாபி இளைஞர் தொடர்பு கொள்ளவும்."

இப்படியான விவாக விளம்பரங்களைத் தினமும் பத்திரிகைகளில் படிக்கலாம்.

றுத்: இவையெல்லாம் மேல்நாட்டவருக்கு வியப்பைத் தான் தருகின்றன.

வீணா: ஆமாம்! அவை உங்களுக்குக் கட்டாயம்வியப்பைக் கொடுக்கும் என்பது எனக்குத் தெரியாமலில்லை. இந்தியாவின் வெவ்வேறு மாகாணங்களிலுள்ள பழக்கங்கள் உங்களுக்கு மேலும் வியப்பைத் தரலாம். ஆனால் நீங்கள் ஒரு விஷயம்பற்றி மிகவும் சந்தோஷப்படலாம்.

என்ன கஷ்டம்தான் ஏற்பட்டாலும் இந்திய மாது தனது கணவரை விட்டுப் பிரிவதை விரும்பமாட்டாள். கணவன் தியவனாக இருந்தாலும் கூட அவனுடன் இருந்து அவனுக்குப் பணி செய்வாள். திருமணம்பற்றி நாம் கொண்டுள்ள கருத்தின அடிப்படையிலேயே திருமணங்கள் பெற்றோர்களா

(8ம் பக்கம் பார்க்க)

### பெண்ணுக்குப் பிரதானம்

**பெண்கள் தம்மை அழகுபடுத்திக்கொள்ளத்தான்வேண்டும். தோற்றத்தில் அழகு வேண்டும். உள்ளத்தில் அன்பு வேண்டும். பேச்சினில் இனிமை வேண்டும். இதை காந்தியடிகளின் கீழ்வரும் கூற்று உணர்த்துகிறது.**

**"அழகிய முகம் ஒருவரை வசீகரிக்கும். ஆனால் அன்பான பேச்சு ஒருவரை அடிமைப்படுத்தும்."**




பெல்ஜியன்

# முள்ளுக் கம்பி

$12\frac{1}{2}$ & 14 அளவு

ஒவ்வொரு சதுர அங்குலத்துக்கும் 45 தொன் வீத அளவுக்கு இதை முள்ளுக்கம்பி நீட்டி இழுக்கக் கூடியது.

லாபமான விலைக்குக் கிடைக்கும் எமது முள்ளுக்கம்பி சகல விதமான வேலியடைப்புக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

கூ. மொ. வி. தாபனம் கடினப்பொருள் இலாகா

40, மக்கலம் வீதி, கொழும்பு-10.

கூ. மொ. வி. தாபனத்துசில்லறைக் கடைகள் எல்லாவற்றிலும் கிடைக்கும்.

CMS/HW/322

# உடலுக்கும் உள்ளத்துக்கும் 'யோகாசனம்' அவசியம்

— எம். பி.

மட்டக்களப்பு, செவ்வாய்

"இளைஞர்களானலும், முதியவர்களானலும் அவர்கள் உடலுறுதியும், உள்ளத் தூய்மையும் பெற்று வாழ, யோகாசனப் பயிற்சி அவசியம் தேவை. சர்வமத சன்மார்க்க நெறியுடைய தெய்வ நெறிக் கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஓங்கார சைதன்யர், இப்பகுதியில் யோகாப்பியாச வளர்ச்சியை முன்னிட்டு, இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துவது பாராட்டத்தக்கது" என மட்டக்களப்பு தெய்வ நெறிக் கழக, ஸ்ரீ சிவானந்த ஆச்சிரம கட்டிட நிதிக் காட்சிக்குத் தலைமை தாங்கிய மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராஜதுரை தமது தலைமையுரையில் கூறினர்.

மட்டக்களப்பு நகாசபைத் தலைவர் திரு. ஜே. எல். திஸவீரசிங்கம், விவேகானந்தா மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கமலபூஷணி திருநாவுக்கரசு ஆகியோரும், தெய்வ நெறிக் கழகத்தின் செயலைப் பாராட்டிப் பேசியதோடு, கழகத்தின் சார்பில் ஸ்ரீ ஓங்கார சைதன்யர் நடாத்திவரும் யோகாசனப் பயிற்சி வகுப்புகளில் அனைவரும் கலந்து பலன் பெற வேண்டுமெனக் கூறினர்.

# கான்ஸ்டபிளை கத்தியால் குத்த முயன்ருராம்

## வழக்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், திங்கள்

சங்கானைப் பொலிஸ் நிலயத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கே. ஏ. டி. சில்வா என்பவரை சங்கானை கிழக்கைச் சேர்ந்த வேலன் நாகன் என்பவர் கத்தியால் குத்த முயன்றதாக சங்கானைப் பொலிசாரால் குற்றஞ் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெள்ளி. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் பொலிஸ் கான்ஸ்டபிள் சில்வாவின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

சில்வா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"நானும் சங்கானைப் பொலிஸ் நிலயப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் நூர்டின், சார்ஜண்ட் முருகேசு ஆகியோரும் மற்றும் இரு கான்ஸ்டபிள்களும் சென்ற மாதம் 23 ம் திகதி இரவு ரோந்து சென்ருேம். நாங்கள் ஓர் ஒழுங்கையினூடாகச் செல்லுகையில் எதிரி ஓர் கிறிஸ் கத்தியுடன் வந்தார். அப்போது நேரம் 8-30. எதிரி கத்தியுடன் வருவதைக் கண்ட இன்ஸ்பெக்டர் நாங்கள் ரோந்து சென்ற ஜீப்பை நிறுத்தும்படி சாரதிக்கு உத்தரவிட்டார். ஜீப் நின்றதும் இன்ஸ்பெக்டர் ஜீப்பால் இறங்கி எதிரியை நோக்கிச் சென்ருர். அப்பொழுது இன்ஸ்பெக்டரின் கையில் தடி இருந்தது. நானும் இன்ஸ்பெக்டரைத் தொடர்ந்து சென்றேன். என்னிடமும் குண்டாந் தடி இருந்தது. இன்ஸ்பெக்டர் எதிரியிடம் கத்தியைக் கீழே போடும்படி கேட்டார். ஆனல் எதிரி கத்தியைப் போடவில்லை. என்னைக் குத்த முயன்ருர். அப்பொழுது நான் சற்று பின் சென்று என்னிடம் இருந்த குண்டாந் தடியால் எதிரியின் தலையில் அடித்தேன். அப்பொழுது இன்ஸ்பெக்டரும் தன்னிடமிருந்த தடியால் எதிரிக்கு ஒரு அடி போட்டார். அடி விழுந்ததும் எதிரி கத்தியை உடனே நிலத்தில் போட்டார்.

நான் எதிரியின் தலையில் அடித்தமையால் அவருக்கு இரத்தக் காயம் ஏற்பட்டது. நாங்கள் அவரைக் கைது செய்து பொலிஸ் நிலயத்திற்கு அழைத்துச் சென்ருேம். பின்னர் அங்கிருந்து வட்டுக்கோட்டை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

எதிரி தான் சுற்றவாளியென்வே நீதிபதி எதிரியை 1000 ரூபா பிணையில் செல்லும்படியும் அடுத்த மாதம் 2 ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

# சட்டவிரோதமான கத்தியை வைத்திருந்தாராம்

மாவிட்டபுரம், திங்கள்

சங்கானை கிழக்கைச் சேர்ந்த வேலன் நாகன் என்பவர் சட்டவிரோதமாக ஐந்தரை அங்குலம் நீளமான கிறிஸ் கத்தியை வைத்திருந்ததாக சங்கானைப் பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெள்ளி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் எதிரி தான் குற்றவாளியல்ல எனக் கூறிஞர். நீதிபதி எதிரியை 1000 ரூபா பிணையில் செல்லும்படியும் இம்மாதம் 19-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் கட்டளையிட்டார்.

# வானெலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

புதன் 7-3-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 வீணை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-45 கோட்டு வாத்தியம்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 ஆர். முத்துச்சாமி - வயலின், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 கே. கே அந்தோனி - பாட்டு.

## திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 காருக்குறுச்சி எஸ். நாராயணன் - வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கேள்வி அரங்கம், 7-45 'ஒற்றைக்கல் மோதிரம்' - தொடர்நாடகம், 8-00 காருக்குறிச்சி எஸ். நாராயணன் - வீணை, 8-30 திரைபடஇசை, 9-30 லயவின்யாசம், 9-50 இசைமாலை.

# இணுவில் முத்தமிழ்விழா இறுதிநாள் நிகழ்ச்சி

இணுவில், செவ்வாய்

"இலக்கிய உணர்ச்சியுடன் கலை உணர்ச்சியும் தமிழ் மக்கள் மத்தியில் புத்துயிர் பெற்றிருக்கிறது. நவநாகரிகமான சினிமாக் காலத்தில் யாழ்ப்பாண நகரில் கிழமைக்கு ஒரு நாடக வீதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது" என இணுவில் இளந்தாரி கோவில் சன சமூக நிலய ஆதரவில் இணுவில் கிழக்கு கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற முத்தமிழ் விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சியான நாடக விழாவுக்குத் தலைமைவகித்துப்பேசிய டாக்டர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

"கிராமச்சங்கத்தினல் இப்படியான விழாவிற்கு 1000 ரூபாய் வரை நன்கொடை வழங்க வேண்டுமென சிலர் கூறினர். நானும் அதை ஆதரிக்கிறேன். ஆனல் அரசாங்கம் சனசமூக நிலயங்களுக்குக்கொடுத்துவந்த சலுகைகளை எல்லாம் நிறுத்திவிட்டது. இதன்காரணமாக எதுவும் செய்யமுடியாதவனுய் இருக்கின்றேன்" என கிராமச்சங்கத்தலைவரும் உடுவில் எம். பி. யுமான திரு. தர்கலிங்கம் கூறினர். தமிழ் மன்றக்காரியதரிசி சி. நடராசாவினல் வரவேற்புரையும், நிலயக்காரியதரிசியினல் நன்றியுரையும் கூறப்பட்டபின்பு, யாழ்ப்பாண வட்டாரத்திலுள்ள பல சன சமூக நிலயங்களிளதும் நாடகங்கள் நடித்துக்காண்பிக்கப்பட்டன.

வவனியா, மன்னர் மாவட்ட உள்ளூராட்சி விசாரணை அதிகாரி திரு. வை. ச. சண்முகம் இவ்விழாவில் கலந்து கொண்டார். முன்னை நாள் சன சமூக நிலயக்காரியதரிசி திரு விசாகப்பெருமாளும் பேசினர். டாக்டர் சுப்பிரமணியம் பரிசில்களை வழங்கினர்.

# பயமுறுத்தியவருக்கு 2 வாரக் கடூழியம்

இளவாலை, செவ்வாய்

இளவாலை பத்த தலை...யைச் சேர்ந்த சின்னப்பு சவுந்தரநாயகம் என்பவரை அதே ஊரைச்சேர்ந்த குட்டியர் அனையா அல்லது பிலிப் ஞானைக்கம் என்பவர் உதாசீனமாக ஏசிப் பயமுறுத்தியதாகக் காங்கேசந்துறை பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு சென்ற வெள்ளிக்கிழமை 2-ந் திகதி மல்லாகம் நீதவான் திரு. வெள்ளி தாமோதரத்தினல் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதவான், அவருக்கு இரண்டு வாரக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

## சன்றைஸ் வெற்றி

வேலணை, செவ்வாய்

வேலணைமத்திய கல்லூரிக் கோஷ்டிக்கும், புங்குடுதீவு சன்றைஸ் கிளப்பிற்கும் ஓர் சிநேகபூர்வமான கைப்பந்தாட்டமொன்று நடைபெற்றது. முதலிரு ஆட்டங்களிலும் புங்குடுதீவு சன்றைஸ் கிளப் வெற்றி பெற்றது.

## பயிற்சி வகுப்பு

நுவரேலியா, செவ்வாய்

கூட்டுறவு விற்பனவு வசதி வாடிக்கையாளர் ஆகியன பற்றி பயிற்சி வகுப்பொன்றை வர்த்தக மந்திரி திரு டி. பி. இலங்கரட்ண இங்கு ஆரம்பித்துவைத்தார்,

# உணவுப்பசியை மட்டுமன்றி அறிவுப்பசியையும்தீர்ப்போம்

- உதவிஅதிபர்

மட்டக்களப்பு, செவ்வாய்

"கெயர் ஸ்தாபனம் இலங்கை வாழ்மக்களது உணவுப் பசியைத் தீர்ப்பதில் எத்தகைய அக்கறை கொண்டுள்ளதோ, அதேபோல இலங்கை மக்களின் அறிவுப் பசியையும் தீர்த்துவைக்க ஆசை கொண்டுள்ளது. ஆகையால்தான் பாடசாலைகளுக்கும், குழந்தைகளுக்கும் கெயர் பால்மா கொடுத்துதவுவதுபோல, இது போன்ற பகிரங்க வாசிக சாலைகளுக்குத் தேவையான அறிவு நூல்களையும் இலவசமாகக் கொடுத்துதவ முன்வந்துள்ளது."

கெயர் ஸ்தாபனத்தின் சார்பில் மட்டக்களப்பு பொது நூல் நிலயத்திற்கு இலவசமாக வழங்கப்பட்ட ஐயாயிரம் ரூபாவுக்குமேல் பெறுமதிவாய்ந்த புத்தகங்களை, வாசிகசாலை நிர்வாகிகளிடம் ஒப்படைத்துப பேசுகையில், இலங்கையில் உள்ள 'கெயர்' ஸ்தாபனத்தின் உதவி அதிபர் திரு. றிச்சர்ட் சி. ஹோல்ட்றன் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வைபவத்தை முன்னிட்டு பொது நூல் நிலயம் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பின் நகர சபை அங்கத்தவர்கள், பாடசாலை அதிபர்கள். மற்றும் முக்கிய பிரமுகர்கள் அனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர். நகர சபைத் தலைவர் திரு. ஜே. எல். திஸவீரசிங்கம், பெறுமதிவாய்ந்த திறமையான புத்தகங்களை இலவசமாகக் கொடுத்துதவிய 'கெயர்' ஸ்தாபனத்திற்கும், புத்தக அன்பளிப்பு வைபவத்தில் கலந்துகொண்ட 'கெயர்' ஸ்தாபன உதவி அதிபர் திரு. றிச்சர்ட் சி. ஹோல்ட்றனுக்கும் நன்றிதெரிவித்தார்.

## சிவராத்திரி

பருத்தித்துறை, திங்கள்

தம்பர்சிட்டி சித்திவிநாயகர் ஆலயத்தில் வியாபாரிமூலை தொண்டர்சபைச் சார்பில் மகா சிவராத்திரிவிழா கொண்டாடப்பட்டது.

சைவ நாயன்மார்கள் பற்றிய சொற்பொழிவு, நாவலர் புராண படனம், கூட்டுப் பிரார்த்தனை ஆகியவற்றுடன் செல்வி சிரோன்மணியின் இன்னிசைவிருந்தும் நடைபெற்றது.

பருத்தித்துறையைச் சேர்ந்த புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றம் சிவராத்திரியை முன்னிட்டு பல சிறு நாடகங்களை நடத்தியது.

மன்ற மாணவிகள் கூட்டுப் பிரார்த்தனை நடத்தியதுடன் சங்கீத, நடன நிகழ்ச்சிகளையும் நடத்தி விழிப்புக்குதவினர். பெருந்தொகையான பெண்மணிகள் கூட்டுப்பிரார்த்தனையில் கலந்துகொண்டனர்.

## கவர்னர்ஜெனரலுக்கு பாராட்டு

புங்குடுதீவு, செவ்வாய்

சப்ததீவு இந்து மகா சபா, புதிய மகா தேசாதிபதி வில்லியம் கோபல்லவாவின் நியமனத்தையிட்டு அவருக்கு தங்களது இருதயபூர்வமான பாராட்டைத் தெரிவித்துள்ளது.

'பிறின்ரெட்' வொயில்

சேலைகள்

40 க்கு மேலான டிசைன்களிலும் கலர்களிலும் உண்டு.

விலை ரூபா 13-50 தொடக்கம்

டயரும்ஸ்

யாழ்ப்பாணம்

"கடாவ் வொயில்"

சேலைகள்

15 பலவித டிசைன்களிலும் கலர்களிலும் விசேஷமாக இறக்குமதி செய்யப்பட்டவை.

விலை ரூபா 13-50 மாத்திரம்

டயரும்ஸ்

யாழ்ப்பாணம்

மங்கையர் உலகம்

## மணவாழ்க்கை....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் மணம் செய்து கொள் ளும் பெண் அல்லாத பிறரா லும் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெறுகிறது. வாழ்க்கையில் ஏற்படக்கூடிய எதையும் தாங் கும் தைரியத்துடன் திருமண த்தை நாம் ஏற்றுக் கொள்கி ரோம். அதனாலேயே எமது நாட்டில் விவாக ரத்துக்கள் வெகு குறைவாகக் காணப்படு கின்றன.

றுத்: ஆகா! மேலை நாட்ட வர்களுக்கும் உங்களுக்கும் எத் தனை வேற்றுமை! மேலைநாடுக ளில் விவாகரத்து தினமும் அதிகரித்து வருகிறது. திரு மணம் செய்து கொள்ளுமுன் னர் காதலில் இறங்கிவிடுவ தால்தான் மேலைநாடுகளில் விவாகரத்து சர்வசாதாரண மாகிவிட்டது போலும். முத லில் காதல் செய்வதால்தான் பெண்கள் புருஷனிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கிறார்கள். பழைய புனித முறையொன் றின் அடிப்படையில் இந்திய மக்களிடையே மணவாழ்க்கை வெற்றிகரமாக இருந்துவரு கின்றது. எது எப்படி இருந் தாலும் இதை எவரும் மறுக் கவோ மறைக்கவோ முடியாது என்பது என் கருத்து.

## சேர் ஒலிவர் பதவி...

(5ம் கலத் தொடர்ச்சி)

ங்க அவர் பதவியிலிருந்து நீக் கப்படமுடியும்!

நீதிமந்திரி:- 'விருப்பம்உள்ள வரை' என்பதற்கு அவரது பதவிக் காலம் முடிவடையா விட்டாலும் பதவியிலிருந்து நீக் கலாம் என்பதும் கருத்து.

திரு ரெஜி பெரேரா:- அவர் (சேர். ஒலிவர்) பதவி நீக்கம் செய்யபபட்டாரா?

நீதிமந்திரி: இல்லை!

திரு. சூசா:- அவர் பதவி நீக்கம் செய்யப்படாவிட்டால் மார்ச் முதலாந்திகதி வரைஎப் படி பதவியிலிருந்தார்?

நீதிமந்திரி: அவருடைய இடத்துக்குப் புதிதாக ஒருவர் நியமிக்கப்படாமல் இருந்த தால்!

திரு. சூசா:- பதவிக்கால முடிவு பற்றி எதுவுமில்லையே!

நீதி மந்திரி:-அது உங்களு டைய வியாக்கியானம்.

## ஜயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறார்களா? இரண்டொ வர் பெயரை மட்டும் என் சில சகாக்கள் குறிப்பிட்டனர். கோவணம் கட்டாத ஊரில் கோவணம் கட்டியவன் பைத் தியக்காரன். இங்கு குடிப்பது தான் பேப்பர்க்காரருக்கு முதல் லட்சணமாகவுள்ளது. ஒருத்திறமையான பத்திரிகைக் காரர் குடித்தே கெட்டழிந் தார். பாவம்!


2-வது வாரம்!

பிளாஸா கெபிட்டல் வெம்பிளி
(வெள்ளவத்தை) (கொழும்பு) (கண்டி)

விஜயா ஸ்ரீகிருஷ்ணு சஹாரா மொடர்ன்
(மட்டக்களப்பு) (திருகோணமலை) (சிலாபம்) (பதுளை)

மனோகர், வீரப்பா, ஈ. வி. சரோஜா, ராஜசுலோசனு

நடித்த




8-வது வாரம்!

கிங்ஸ்லி வெலிங்டன் விஜயா
(கொழும்பு) (யாழ்ப்பாணம்) (அம்பாறை)

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி,

நடித்த

பாச மலர்

மனோகரா (யாழ்ப்பாணம்)

ஜெமினி கணேசன் சாவித்திரி

நடித்த

மகேஸ்வரி

பிற்பகல் 4 மணிக்கு மட்டும்

Two Way Stretch

(English)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்தி லுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இன்று

வண்ணை சிவன்கோவிலில் வித்துவான் ஆசிரியர் திரு. வி க. ஆறுமுகம் இன்று மாலை 6மணிக்கு, அரத்துறை அடிகள் தம்மருள் என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த் துவார்.

### ஏல விற்பனை

1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ந் திகதி புதன் கிழமை காலை 9-30க்கு வாக்கர்ஸ் கொள்ளுப்பிட்டி (கரேஜிக்கு பின்புறம்) மோட் டார் உறுப்புக்கள், துணைக் கருவிகள் ஏலத்தில் விற்கப் படும்.

வேண்டுகோளின் பேரில் பட் டியல் கொடுக்கப்படும்.

இம்மாதம் 12, 13-ந் திகதி களில் காலை 10 மணியிலிருந்து 12 வரையும் பிற்பகல் 2 மணி யிலிருந்து 4 மணி வரையும் பார்வையிடலாம்.

### பாடப்புத்தகங்கள்

திரு. வே. சிவக்கொழுந்து மூன்றும், ஐந்தாம் மனக்கணி தம், மூன்றும் சூழல், விஜயன் விக்டோரியா இலங்கைச் சரித் திர விளக்கம் புதியபதிப்புகள் வெளிவந்துவிட்டன. ஆசிரியர் கட்கும் கொமிஷனுண்டு. தேவைக்கு எழுதுக. கலாபவ னம், பருத்தித்துறை.

### பிரசித்த ஏல விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக் கோர்ட்டில்

இல. 6906

1. புலோலி கெற்கு சின் னையா சுப்பிரமணியமும்
2. பெண் தெய்வானைப்பிள் ளையும்.

வழக்காளிகள்.

எதிராக

1. புலோலி கிழக்கு முருகப் பர் இராசப்பு வல்லி,
2. பெண் ஆரோக்கியம்.
3. கிறிஸதோ அருளப்பு, பெண் ஞானப்பு.

எதிரிகள்.

மேற்கூறிய இலக்கவழக்கில் தீராத தீர்வைபபடியும் எனக் குக் கோர்ட்டால் 1962ம் ஆண்டு மாசி மீ 9ந்- திகதி அனுப்பப் பட்ட கொமிஷன் அதிகாரப்ப டியும் 1962ம்ஆண்டுசித்திரை மீ 7ந்-திகதி சனிக்கிழமை முற் பகல் 10மணி தொடக்கம பின் னல் விபரிக்கப்படும் ஆதனமிட மாகநின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று புலோலி மேற்கு சிங்கபாகு தேவன் குறிச்சியிறை "மாரக் காய்" நிரை $5\frac{1}{4}$ இதில் கிணற் றுக்குமதன் பாவிப்புக்குமாக வுள்ள குளி $\frac{1}{4}$ நீக்கி மிகுதிக்கு நிரை 5 குளி $\frac{1}{2}$ இதில் மேற் கரைவாசிக்கு நிரை 2. குளி $9\frac{1}{4}$ இதில் கிழக்குப்புறமாக நிரை 1நீக்கி மிகுதிக்கு நிரை 1 குளி $9\frac{1}{4}$ அதைச் சேர்ந்தவைகளும், எல்லைகிழக்கு தேவசகாயம் பெண் அன்னம்மாவுக்குடைய சொல்லிய நிரை 1 வடக்கு ஒழுங்கையும் கிணற்றுப் பாவி ப்பு நிலமும். மேற்கு வல்லிபு ரம் பெண் இராசம்மாவுக்கு டைய ஆதனம். தெற்கு சங்க ரப்பிள்ளை கைம்பெண்செல்லம் மாவுக்குடைய ஆதனம். இவ் வெல்லைக்கு உட்பட்டவைகள் முழுவதும் கிணற்றிலும் கிணற் றுப்பாவிப்பு நிலத்திலும். பிளங் கும் உரிமையும்.

அறவிடவேண்டிய
தொகையின் விபரம்

தீர்வைத் தொகை ரூபாய் 1195. இதில் ரூபாய் 650 க்கு 19-12-60 தொடக்கம் 6-5-61 வரையும் 10 வீத வட்டி ரூபாய் 24-65. அதன் பின முழுத் தொகைக்கும் 7-5-61 தொடக் கம் 9-2-62 வரையும் 5வீத வட்டி ரூபா 45-75. கோர்ட்டுச் செலவுக்கு ரூ.237-61. மொத்தம் ரூபா 1504-01.

ஆ. சபாரத்தினம்
Commissioner of Sales

தும்பளை,
2-3-62

# சேர் ஒலிவர் பதவி...

மட்டும் கவர்னர் ஜெனரல் தமது பதவியை ராஜினமாச் செய்துவிட்டதாக ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அந்த பத்திரிகையில் புதிய கவர்னர் ஜெனரல் நியமிக்கப் பட்டுள்ளதாக பக்கிங்காம் அரண்மனை அறிவித்தலும் வெளியிடப்பட்டிருந்தது:

### விசாரிக்கப்பட்டாரா?

செனட்டர் டொரிக்டி சூசா மேலும் கூறியதாவது:-

சென்றமாதம் 13-ந் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபையில் நிதிமந்திரி அறிவித்தபடி சதி சம்பந்தமாக சேர் ஒலிவர் விசாரிக்கப்பட்டாரா? சேர் ஒலிவர் நாட்டை விட்டு வெளி யேறுவதானல் அந்நிய செலா வணி விசேஷமாக பெருமள வில் அனுமதியளிக்கப்படும் என்று அடிபடும் வதந்தியில் உண்மை உண்டா?

இச்சந்தர்ப்பத்தில் சபை முதல்வர் செனட்டர் ஜயசூரியா பதிலளிக்கையில் சேர் ஒலிவர் பதவி நீக்கம் செய்யப்பட வில்லை; ராஜினமாச் செய்யவு மில்லை. பதவிக்காலம் முடிவ டைந்துவிட்டதால் புதிதாக ஒருவர் நியமிக்கப்பட்டார்" என்று அறிவித்தார்.

திரு. சூசா:- பதவிக்காலம் எப்பொழுது முடிவடைந்தது?

திரு. ஜயசூரியா:- 1961—ம் ஆண்டு ஜூன் அல்லது ஜூலை மாதத்தில்!

திரு. ரெஜிபெரேரா:-கணிசமான அளவு காலத்துக்கு சேர் ஒலி வர் பதில் கவர்னர் ஜெனர லாக சட்டவிரோதமாகக் கட மையாற்றினரென்று சபை முதல்வரின் பதிலிலிருந்து நாங்கள் கருதுவதா?

திரு. ஜயசூரியா:- அவருக்குப் பதிலாக அப்பதவிக்கு வேறொ ருவர் நியமிக்கப்படும்வரை அவர் சேர் ஒலிவர் தற்காலி கமாகக் கடமையாற்றினர்.

திரு சூசா:- எனது கேள்வி களுக்கு சபை முதல்வர் பதி லளித்துவிட்டதாக நான்நினைக் கவில்லை.

எனது முதல் கேள்வி சதி சம்பந்தமாக அவர் (சேர் ஒலி வர்) விசாரிக்கப் பட்டாரா? அல்லது விசாரணை செய்யப் படுவாரா? இரண்டாவது கேள்வி- அவர் இலங்கையை விட்டுச் செல்வதானல் விசேஷ மாக அந்நிய செலாவணி 'கோட்டா' அனுமதிக்கப்படும் என்ற வதந்தி உண்மையா?

திரு. ஜயசூரியா:- இந்தக் கேள்விக்குப் பதலளிக்க முடி யாமலிருப்பதற்காக நான் வருந்துகிறேன். அவையெல் லாம் வெறும் வதந்திகள்.

திரு. சூசா:- அவர் (சேர் ஒலிவர்) விசாரிக்கப்படுவா ரென்பது உண்மை விஷயம். அவர் விசாரிக்கப்பட்டாரா? அல்லது விசாரணை செய்யப் படுவாரா?

திரு. ஜயசூரியா:- இதற்கு நான் பதிலளிக்கக் கூடிய நிலை யில் இல்லை!

செனட்டர் சூசா:- மேலும் கூறியதாவது:-

எங்கள் அரசியல் திட்டத் தைத் தெரிந்தவர்கள் எவரும் கவர்னர் ஜெனரல் மாட்சிமை தங்கிய மகாராணியின் விருப் பம் உள்ளவரை தமது பதவி யைத் தொடர்ந்து வகிக்கிறார் என்பதை ஒப்புக்கொள்வர். எனவே அவருக்குப் பின் புதி தாக ஒருவர் நியமிக்கப்படும் வரை தற்காலிகமாகக் கட மையாற்றுவது என்ற பேச் சுக்கே இடமில்லை.

சேர். ஒலிவர் பதவியிலிரு ந்து நீக்கப்பட்டாரா? அல்லது ராஜினமாச் செய்தாரா! இது தான் எனது கேள்வி.

திரு ஜயசூரியா:- இதற்கு என்னல் பதில் சொல்லமுடியா மலிருக்கிறது!

### எதற்காக இதுவரை இருந்தார்?

திரு. சூசா:- சேர். ஒலிவரின் பதவிக்காலம் 1961-ம் ஆண்டு ஜூன் அல்லது ஜூலை மாதத் தில் முடிவடைந்து விட்டிருந் தால் 1962ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் திகதிவரை அவர் எதற்காக வைக்கப்பட்டிருந் தார்?

திரு: ஜயசூரியா:-

அவருக்குப் பதிலாக புதிய வர் ஒருவர் நியமிக்கப்படும் வரை அவர்(சேர்ஒலிவர்)அங்கு. வைக்கப்பட்டிருந்தார்.

சபைத்தலைவா:- ஒரு மந்திரி வெளிநாடு சென்றிருந்தால் அவருக்குப் பதிலாக வேறொரு வர் கடமையாற்றுவது போல் புதிய கவர்னர் ஜெனரல் நிய மிக்கப்படுமவரை அவர் தற்கா லிகமாகக் கடமையாற்றினர்!

திரு சூசா:- அரசியல் திட்டத் திலுள்ள நிலையை மீண்டும் ஒரு தரம் சபைமுதல்வரின் கவனத் துக்கு நான் கொண்டுவரட் டுமா? 'மகாராணியின் விருப் பம் உள்ளவரை கவர்னர் ஜென ரல் தமது பதவியிலிருப்பார்' என்பதுதான் அரசியற் திட் டம். அரசாங்கம் அரசியற்திட்ட செயல் முறைகளை மீறிவிட்ட தாவென்பதை சபை முதல்வர் சபைக்குத் தெரிவிப்பாரா? இச்செய்கை அரசியற் திட்டத் துக்கு ஏற்றதாகாதது மட்டு மல்ல, நாட்டையே திகைப்பில் ஆழ்த்திவிட்டது.

### உண்மையை அறிவோம்

செனட்டர் டொரிக் டி, சூசா மேலும் கூறியதாவது:-

பதவிக்காலம் முடிவடைந்த பின் அவருக்குப்பதிலாக ஒரு வர் ஒருநாள் காலை திடீரென்று நியமிக்கப்படும்வரை கவர்னர் ஜெனரல் ராணி மாளிகையில் வெறுமனே சாத்திருந்தாரென் பதுதான் சபைமுதல்வர் கூறு வதன் அர்த்தமா? நாங்கள் உண் மைவிபரங்களை அறிந்துகொள் வோம்.

நீதிமந்திரி: 'மகாராணியின் விருப்பம் உள்ளவரை' என்ப தன் கருத்து அப்பதவிக்குப் புதியவர் ஒருவர் நியமிக்கப்ப டும்வரை என்பதாகும்."

திரு. சூசா: அப்படியிருக்க முடியாது! விருப்பம் உள்ள காலம் வரை' என்பதில் பிரதமரின் விருப்பத்துக்கிண-

(2-ம் கலம் பார்க்க)


புத்தப் புதிய இறக்குமதி!

ஹான்ட் லூம்ஸ்

கம்பளங்கள்

நூல் வேலை செய்யப்பட்டது
பலவித டிசைன்களிலும்
மல்ரி கலர்களிலும் உள்ளன.

அளவு 60 x 90"

விலை 49–50 மாத்திரம்.

டயரும்ஸ்

யாழ்ப்பாணம்.